ஞாயிறு வெளியீடு    ஆண்டு சந்தா ரூ. 5    தனிப்பிரதி 0—1—3    REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 6—1—1946 | இதழ் 38

சிறு கதை:

## இரு பரம்பரைகள்

(சௌமியன்)

"ஜூலியா! என்ன கண்ணு, கோபம்? ஜிம்மி! துஷ்டன்நீ! போ! போய்ச்சமாதானம் செய் ஜூலியாவை.

ஜூலி! ஜூலி! இதோ பார் இப்படி! அடடா! புருஷன் மேலே கோபம் வந்துவிட்டால் நம்மஜூலியாசெய்கிறஅட்டகாசம்இருக்கே, சொல்லிமுடியாது. எப்படி முறைத்துப்பார்க்கிறாள், பார்! ஜிம்மி, பாபம் கெஞ்சிப்பார்த்துத் தோற்றுப்போய், ஜூலியாவின் கோபம் தானாகத்தணியட்டும்என்று போய்விட்டான்.

என்ன இருந்தாலும், ஜூலி! உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது!"

* * *

"உங்களுக்கும் நாளைக்கு ஒரு புருஷன் வந்தால்..........." என்று கேலிசெய்ய ஆரம்பித்தாள், மாரி; தேவா, அவள் காதைத்திருகிக்கொண்டே, "பேசாதே! எப்போது பார்த்தாலும், இந்தக் கல்யாணப் பேச்சேபேசிக்கேலிசெய்வதுதானா வேலை?" என்று, வேடிக்கையாகக் கண்டித்தாள். மாரி,இதுபோல்கலியாணப்பேச்சைக் கேட்டுக் கேலி செய்த எத்தனையோ "தேவா"க்கள், தொட்டிலாட்டிவிட்டுத் தூங்கிய குழந்தைக்குமுத்தமிட்டதைப் பார்த்தவள். தேவா, கலியாணப் பேச்சைக் கேட்டுக் கோபித்தால், மாரி, அடங்கிவிடுவாளா என்ன!

"ஜூலியா எவ்வளவு ரோஷக்காரியோ அவ்வளவு ரோஷக்காரிதானேம்மா நீயும்!" என்று மாரி மேலும், கேலிசெய்துகொண்டிருந்தாள். ஜூலியாவைச் சாந்தப்படுத்தமுடியாமல், சோகமடைந்தஜிம்மியின் பரிதாபப் பார்வையைக் கண்டு, தேவா, ஓடிச்சென்று, பிஸ்கட் துண்டுகளைக் கொண்டுவந்து போட்டாள் ஜிம்மிக்கு, ஜூலியாவிடம் சரசமாடுவதிலே இருக்கிற சுவை, பிஸ்கட் தின்பதிலே ஏற்படுமா? தின்னவில்லை! ஜூலியாவும், ஒருமுறை ஜிம்மியின் பக்கம் திரும்பிப்பார்த்துவிட்டுமறுபடியும்அலட்சியமாக வேறுபக்கம் திரும்பிக் கொண்டது.

* * *

"அப்பா! அந்தக் குச்சுநாய்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன பார்த்தாயா? நேற்று,'நான் ஜூலியாவைத் தொட்டுத் தடவிக்கொடுத்தேன், பட்டுமெத்தைமேலே கை வைப்பதுபோல இருந்ததப்பா!"

"அழகான நாய்கள்தான்! ஜூலியா, ஜிம்மி, இரண்டையும், பெங்களூரில் வாங்கினோம், விலை என்ன தெரியுமோ? போனமாதம், நமது கம்பங்கொல்லையை விற்றோமே, என்ன விலைக்கு?"

"250-க்கு"

"ஜூலியா ஜிம்மியின் விலையும் 250-தான்"

சுகானந்த முதலியாரும் அவர் மகன்சிங்காரமும், மார்வாடியிடம் அடமானத்திலிருந்த தங்கள் ஓட்டு வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, தனபாலச் செட்டியாருடைய பங்களாவிலே, 'தர்பார்' நடத்திக்கொண்டுவந்த ஜூலியா ஜிம்மி எனும் குச்சு நாய்களைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள் இதுபோல. வீடு, ஈடுகாட்டப்பட்டது! கம்பங்கொல்லைவிற்றாயிற்று! அந்தக் கொல்லையின் விலையும், குலைக்கும்போதும் நாசுக்காகக் குலைக்கும் நாய்களின் விலையும் ஒன்று! அங்கே 250-ரூபாயில் நாய் வாங்கினார்கள், இங்கே இரண்டு தலைமுறையாகக்குடும்பச் சொத்தாக இருந்த கம்பங்கொல்லையை 250-ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள்! இந்த நிலையிலே, பெயர் சுகானந்தம்என்று இருந்துபயன்? சுகமும் கிடையாது, ஆனந்தமும் கிடையாது!

தனபாலச் செட்டியார், ஒரு காலத்தில், சுகானந்தத்தோடு,சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர். சுகானந்தம் இன்னமும், அந்தச் "சுவல்ப" வியாபாரத்திலேதான்இருந்துவருகிறார். தனபாலச் செட்டியாரோ,எப்படியோஇலட்சாதிகாரியாகி விட்டார்! என்றாலும், பழைய சினேகத்தைமட்டும் விட்டுவிடவில்லை. வீட்டிலே நடைபெறும்எந்தக்காரியத்துக்கும் சுகானந்த முதலியாரை அழைப்பார். 'சிலதுகள் அதிர்ஷ்டம் வந்ததும் தலைகால் தெரியாமல் ஆடும். நம்ம தனபாலு, அப்படிப்பட்டவனல்ல' என்று சுகானந்தம் தன் நண்பர்களிடமெல்லாம் கூறுவான்.

'ஏம்பா தனபாலு!' என்றுதான், சுகானந்தம் அழைப்பது வழக்கம். நேரிலே பேசும்போதும், தன்நண்பர்களிடம் பேசும்போதும், தனபாலு என்று அழைத்த அதேசுகானந்தமே, சில சமயங்களில் 'செட்டியார்' என்று அழைக்கவேண்டி நேரிட்டுவிடும். பங்களாவுக்கு ஒரு காவல்காரன் ஏற்பட்டுவிட்டான். அவன் யார் உள்ளே போவதானாலும், "யார்? என்ன வேலையாகவந்தீர்கள்?" என்று கேட்டுவிட்டுத்தான் அனுப்புவான். சுகானந்தமும், தனபாலும், ஒரேவியாபாரம் செய்தவர்கள், நண்பர்கள், என்று அவன்கண்டானா! தெரிந்தாலுந்தானென்ன! தனபாலச்செட்டியார், அவனுக்கு எஜமான், சுகானந்தம், யாரோ ஒரு ஆசாமிதானே! அப்படித்தானே அவன் கொள்ளமுடியும்? ஒருநாள், சுகானந்தத்தையும் அவன், வாயற்படியண்டை நிற்க வைத்துவிட்டான்.

"யார் நீங்கள்?"

"நானா? நீயாரடாப்பா?புதிசோ? ஏற்பாடே புதுச்சாகத்தான்இருக்கு. நான், அவருக்குச் சிநேகிதன்" என்று சுகானந்தம் பதில்கூறினார். கூறிவிட்ட பிறகு யோசித்தார், 'அவர், இவர்,' என்றல்லவா கூற வேண்டி வந்துவிட்டது, நம்ம தனபாலுவை,என்று. கொஞ்சம்கோபமும் அடைந்தார்.

"நீங்க யாரைப்பார்க்கவேண்டும்?" என்று கேட்டான், காவற்காரன். என்ன சொல்லமுடியும்? தனபாலுவை, என்று சொல்வதா. மரியாதையாக இருக்குமா? உடனே, சுகானந்தம், "நான் தனபாலச்செட்டியாரைப்பார்க்க வேண்டும்" என்றுகூறினார். கூறிவிட்டு, மறுவினாடியோசிக்கலானார் 'செட்டியார்' என்று கூறநேரிட்டதே நம்ம தனபாலுவை; நாமும் அவனும் எவ்வளவுஅன்யோன்யமாகப் பழகினோம், ஒரே கடையிலேஇருந்திருக்கிறோம்,ஒரேவியாபாரம்செய்தோம், இன்று அவன் ஒரு பணக்காரனாகிவிடவே, நாமே அவனைச் "செட்டியார்" என்று சொல்லவேண்டிநேரிட்டது,என்றுகோபந்தான். அந்தக்கோபம்மேலும் அதிகரித்தது,'இங்கேயேஇரு! உள்ளே போய், "ஐயா"வைக்கேட்டுவிட்டு வருகிறேன்'என்றுசொல்லிவிட்டு, வேலையாள் உள்ளேபோனபோது. "ஐயா" வாம், ஐயா! இவனுக்கு அவன் ஐயா, எனக்கென்ன? செ! நாம் இவனைப் பார்க்கவருவதே தவறு.பேசாமல்போய்விடுவோம்" என்றும் நினைத்தார், ஆனால் ஒரு யோசனைவந்தது. வந்ததே வந்தோம், இந்தத்தடவைமட்டும், தனபாலுவைப்பார்த்து, இங்கே நடக்கும் அழுலைப்பற்றிச் சொல்லிக் கண்டித்துவிட்டுப் போய்விட வேண்டும், என்றுதீர்மானித்தான்.

"ஏம்பா தனபாலு! அற்பனுக்கு வாழ்வுவந்தா அர்த்தராத்திரியிலே குடைபிடித்து நடப்பான்என்பார்களே, அதே கதையாத்தான் இரு

## கலைஞர்பால் கருணைகாட்டுக!

(தமிழ் ஒளி)

★

தமிழ்நாட்டுப் பெரியார்கள் இன்பம் வந்து
தழுவுகிற நேரத்தில் தணலில் வீழ்ந்த
அமைவில்லா நிலையொன்றை நாம் அடைந்தோம்
ஆம்அதனைச் சொல்லவெனில் என்றன் உள்ளம்
அமைதியினை இழந்துவிடும்! கண்களினில் நீர்
அருவியென வேபெருகும் மெய்துடிக்கும்
இமைக்குள்ளே நடிக்கற்ற பெருமை யெல்லாம்
இழப்பதெனில் உறுந்துயரக் கெல்லை யுண்டோ?

எத்துறையைப் பார்க்கினுமே தமிழ்நாட் டார்கள்
இழிவுற்றுக் கிடப்பதனைக் கண்டு கண்டு
சித்தந்தான் சோர்கையிலே, "படக்க லைக்கும்
சிறப்புற்ற இசைக்குநல் நகைச்சு வைக்கும்
மெய்த்திறமை கொண்டஇரு தமிழ ருள்ளார்
மேதினியும் அவர்புகழை அறியும்" என்ற
புத்தொளியும் புதுமணமும் பரவுங் காலைப்
புகையிருள்தான் பரவியதால் திகைத்து விட்டேன்

கொடைதந்தான் நகைச்சுவையைக் கூட்டித் தந்தான்
கொள்கைநல மேதந்தான்; உணர்வெ ழுப்பும்
படைதந்தான்; பகுத்தறிவின் படத்தைத் தந்தான்!
பைந்தமிழர் அகத்தெல்லாம் செந்தமிழ்ச் சொல்
நடைதந்தான்; "மதுரத்தின்" நடிப்புத்தந்தான்
நாட்டிலுள தடும்பங்கள் கேள்விக் கெல்லாம்
விடைதந்தான் விளக்கந்தான் தந்தான் எங்கள்
வியன் கலைஞன்! ஆம்அவனே என். எஸ். கிருஷ்ணன்

எழில்தந்த தமிழ்மணிகள் இரண்டும் இன்று
இருட்சிறையில் கிடப்பதுவோ? தமிழ கத்தின்
விழிபெருக்கும் நீர்கண்டீர்! கதறல் கேட்பீர்!
விளைந்துவரும் துயர்காண்பீர் கருணை யொன்றே
பழகும்உளங் கொண்டவரே தமிழ்நாட் டாரே!
பழியில்லை! இதில்கட்சிப் பேத மில்லை!
அழுகுரல் உம்காதினிலே கேட்ட பின்னும்
ஆதரவு தரமுயலா திருக்க லாமோ?

க்கு. ஏது, பெரிய அமுல் நடக்குதே இங்கே, இப்போ. என்னமோ அதிர்ஷ்டம் அடிச்சுது, பணம் சேர்ந்தது, இதற்காகப் பழைய மரியாதை, பாசம், நேசம் எல்லாம் போயிடணுமா? நான் என்னமோ, மற்றவங்களைப்போலே தலை துள்ளிப் போகாமெ, நீ மட்டு மரியாதையோடே இருந்துவருவேன்னுதான் நினைச்சேன். பணம் சேர்ந்ததும், நீயும், 'அதுக' போலத்தான் நடக்கறே. இது சரியல்ல! செல்வமிருக்கே, அது சாஸ்வதமல்ல! என்ன பணம் இருந்தாலும், பிரயோஜனமில்லே, குணம் இருக்கணும். அப்போது தான், லட்சுமி தங்குவா!" என்று மளமளவென்று, தன் மனதிலுள்ளதைப்பூராவும் கொட்டிவிடவேண்டுமென்ற கோபத்தோடுதான் மடமடவென்று, வேலைக்காரன் பின்னேடு, சென்றுர் சுகானந்தம். அவ்வளவு கோபமும் பறந்துபோகும்படி செய்துவிட்டார் தனபாலச் செட்டியார், சுகானந்தத்திடம் பேசி அல்ல, வேலைக்காரனை ஏசி!

"ஏண்டா, தடியா! இவரையா, யாரோ வந்திருக்காங்கா என்று சொன்னே. முட்டாளே! இவர் யாரு? நம்ம, சிநேகிதரடா! இந்த உலகத்திலேயே, என் குடும்ப விஷயமா அக்கரைகொண்டவர் யாராவது இருக்கிருங்காளான்ன, அது இவர்தாண்டா! மடைப்பயலே! இனி, எப்போதானலும்சரி, இவர்வந்கா, நீ நிறுத்தக்கூடாது, கேள்விகேட்கக்கூடாது. இவர்தான் நான், நான்தான் இவர்! போ! மனஷாளுடைய தராதரம் தெரியலே" என்று தனபாலச் செட்டியார் வேலையாளைக் கண்டித்தார். உச்சிகுளிர்ந்தது சுகானந்தத்துக்கு. மெய்மறந்தார். தனபாலுக்குக் கோடி கோடியாகச்சேர்ந்தாலும் தகும் என்று எண்ணிக்கொண்டார். பழைய சிநேகிதத்தை எவ்வளவு மதிக்கிறன் தனபாலு! எவ்வளவு அருமையான குணம்! குணம் அப்படி இருப்பதால்தான் பணம் சேர்ந்தது! என்று எண்ணிக்கொண்டான். தன்னைப் பெருமைப்படுத்திய நண்பனைப் பற்றி அன்றுமுதல், சுகானந்தமும் தானகவே மரியாதையோடு பேசிப் பெருமைப்படுத்தலானன். இந்தநிலையிலே இருந்தது, இருவரின் நட்பும்.

* * *

சிங்காரத்துக்கு, அந்தக் குச்சு நாய்மீது ஏற்பட்ட ஆசை அடிக்கடி அவனைத் தனபாலச் செட்டியாரின் பங்களாவுக்கு இழுக்கலாயிற்று. ஜிம்மியும் ஜுலியாவும் ஊடலோடு திருப்தி அடைந்துவிடுமோ! அழகான இரண்டு "குட்டிகளை" ஈன்றெடுத்து ஜுலியா, பெருமையோடு, அவைகளையும், அவைகளைக் கண்டு பூரிக்கும் ஜிம்மியையும் பார்த்து மகிழ்ந்தாள். குட்டிகளிலே ஒன்று வெள்ளை, மற்ருென்று கருப்பு! நிறத்திலே மாறுபாடு இருந்தது, அழகோ சமம். சிங்காரமோ, இரண்டிலே எதையாவது ஒன்றைப் பெற, தவம் இருக்கவும் தயாரானன். தகப்பனரிடம் மன்றுடினன், ஒரு 'குட்டி'யை வாங்கித்தரச் சொல்லி.

"அப்பா........................"

"என்னடா...................."

"அந்த நாய்க்குட்டி...."

அடே, நமக்கேண்டா அந்தச் சனியனெல்லாம்"

"போ அப்பா! எவ்வளவு அழகாக இருக்கு"

"ஆமாம், அழகுதான், ஆனல் அதற்குப்பாலும் பிஸ்கட்டும் வேண்டுமே. ஒருநாளைக்குஎட்டணவுக்கு"

"எப்படியாவது வளர்க்கலாம் அப்பா. நீங்கள் கேட்டுப் பாருங்களேன் செட்டியாரை"

',கேட்டால் கட்டாயம் கொடுப்பான் தனபாலு. ஆனலும், நமக்குஎண்டா நாயும் பூனையும்"

தந்தைக்கும் மகனுக்கும் இது பேச்சு.

* * *

"கருப்புநிறம்? செச்சே, டர்ட்டி, நமக்கு வேண்டாம்"

"வெள்ளைநிறத்திலும் ஒருகுட்டி இருக்கிறது சார். இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு ஒன்று, உங்களுக்கு ஒன்று தருவதாக நான் முன்பே தீர்மானித்துவிட்டேன்."

"சரி! வெள்ளைநிறத்திலே இருப்பதைக்கொண்டுவா. ப்யூன், இப்போதே வேலைகளைச் சரியாகச் செய்வதில்லே, இந்த நாய்க்குட்டியும் வந்துவிட்டால், தீர்ந்தது, அவன் முழுச்சோம்பேறியாகிவிடுவான்"

டிப்டிகலெக்டர் தாமோதரம் பிள்ளைக்கும் தனபாலச்செட்டியாருக்கும், அதேநாய்க்குட்டி விஷயமாக நடந்தது இந்த உரையாடல். டிப்டிக் கலெக்டர், செட்டியார் போனபிறகு, தனது ப்யூனிடம் அந்தச் செட்டியார் பெரிய தொல்லைதருகிருர் என்று கூடக் குறை கூறினர். செட்டியாரோ, கலெக்டர் துரை வீட்டிலேதான் கொடுத்தநாய்வளரப்போவது தெரிந்து பெருமைஅடைந்தார்.

* * *

சிங்காரத்தின் தொல்லை தாங்காது சுகானந்தம் தனபாலச்செட்டியாரிடம் சென்று நாய்க்குட்டி வேண்டுமென்று கேட்டபோது, செட்டியார் மறுப்பார் என்று கொஞ்சம்கூட எண்ணவேயில்லே. கேவலம் ஒருநாய்க்குட்டியைப், பால்யசிநேகனுக்குத்தர, தங்கமான குணம் படைத்த தனபாலு தடைசொல்வான என்று நினைத்தார். செட்டியார் சொன்ன பதிலைக் கேட்டபோது, சுகானந்தத்துக்குத், தூக்கிவாரிப்போட்டுவிட்டது.

"நாய்க் குட்டியா? சரிதான். டிப்டிக் கலெக்டர் இருக்கிருரே, அவர், இந்தக்குட்டி தனக்கு வேண்டுமென்று, கெஞ்சிக் கூத்தாடினர். என்னசார் இது, ஒருகுட்டியை இன்கம்டாக்ஸ் ஆபீசர்வேண்டுமென்றுர், சரி, என்று அரைமனதுடன் ஒப்புக்கொண்டேன், இருப்பது இன்னும் ஒன்றுதான், அதையும் கொடுத்துவிட்டு எப்படித்தான் சார் மனசு நிம்மதியிருக்கும் என்று எவ்வளவோ சமாதானம் சொன்னேன், அந்த ஆள்பிடிவாதக்காரன், நூறுனலும் ஆயிரமானலும் தருகிறேன், குட்டி கட்டாயம் கொடுத்தாக வேண்டுமென்று "ஆர்டரே" போட்டுவிட்டார். நான் என்ன செய்வது! அடுத்த தடவை, கட்டாயம் உனக்குத்தருகிறேன்" என்றுர் தனபாலச்செட்டியார். சுகானந்தத்துக்குக் கோபந்தான். கேவலம் ஒரு நாய்க்குட்டி, அதைத்தர மறுக்கிருனே, என்று கோபந்தான். ஆனல் அந்தக் 'கேவலம்,' கலெக்டர்துரைவீட்டுக்கு அல்லவா குடிபோகிறது, என்ன செய்வது! அடுத்த தடவை ஆகட்டும் என்றபதிலை, சுகானந்தம் தன் மகனுக்கு கொஞ்சம் மெருகு பூசித்தந்தார். சிங்காரத்துக்குக்கஷ்டமாகத்தான் இருந்தது, என்ன செய்வது? டிப்டிக்கலெக்டர், இன்கம்டாக்ஸ் ஆபீசர், என்று செட்டியார் சொல்லிவிட்ட பிறகு, இவன் என்ன கூறமுடியும். சிங்காரத்தின் சார்பிலே தேவா ஆஜரானள்!

'என்னப்பா இது! நமக்கு எவ்வளவு வேண்டியவர் சுகானந்தம். அவருக்குக் கொடுத்தால் என்ன? இன்கம் டாக்ஸ் ஆபீசருக்கு நாய் வேண்டுமென்று யார் கேட்டார்கள். நீங்களாகத்தானே வலியவலியப்போய்க்கேட்கிறீர்கள் நாய்க்குட்டிவேண்டுமா, என்று' என்று தேவா வழக்குத்தொடுத்தாள். தனபாலச் செட்டியார் சிரித்தார், தேவாவின் உலகஞான சூனியத்தைக்கண்டு!

'பைத்யமம்மா நீ! நானக வலியப்போவதாகக்கேலிசெய்கிருயே, இன்கம்டாக்ஸ் ஆபீசர் வீட்டுக்கு மட்டுமல்ல, டிப்டிக்கலெக்டர் வீட்டுக்கும் நானகத்தான் சென்று, நாய்க்குட்டிவேண்டுமா என்று கேட்டேன். இன்னும் ஒருகுட்டி இல்லையேஎன்று வருத்தமும் படுகிறேன், உனக்கென்னதெரியும் அந்தவிஷயம்' என்று கூறினர்.

"இன்னெரு குட்டி இருந்தால் சுகானந்தத்துக்குத்தரலாம் என்று நினைக்கிறீரா? ஐயோ, பாவம், அவ்வளவாவது உங்க சிநேகிதர் மீது அன்பு இருக்கிறதே அதுபோதும்" என்று தேவா கொஞ்சம்படபடப்பாகப்பேசினள். அந்தப் படபடப்பைக்கண்டு தனபாலச் செட்டியார் ஆச்சரியப்படவில்லே. தேவாவுக்குத்தான் ஆச்சரியம் பிறந்தது, அவர் அதற்கு அளித்த மறுமொழி கேட்டு. "முட்டாள் பெண்ணே! மூன்ருவது குட்டி இருந்தால், அந்த விடியாமூஞ்சிக்குத்தருவேன் என்றல்ல நான் சொன்னதற்கு அர்த்தம். மூல்தானிஇருக்கிருனே, நமக்கு கேட்கும்போது கடன்தருகிருனே, அவனுக்குக் கொடுத்திருப்பேன். நமது வீட்டு நாய்க்குட்டி, ஒன்று கலெக்டர் பங்களாவிலும், மற்ருென்று இன்கம்டாக்ஸ் ஆபீசர் வீட்டிலும் உலாவினல், எவ்வளவு இலாபம் தெரியுமோ நமக்கு. ஏதுசார் நாய்க்குட்டி என்று யாராவது கேட்கிறபோதெல்லாம், டிப்டிக்கலெக்டரும், ஆபீசரும், "இதுவா, தனபாலச்செட்டியார் தந்தார்" என்று கூறுவார்களே! எத்தனை முறைஎன்பெயரை உச்சரிப்பார்கள். என்னைப்பற்றி பெரிய ஆபீசர்கள் பேசினல், ஊரிலேஎனக்கு எவ்வளவுமதிப்புஇருக்கும். தனபாலச் செட்டியாருக்கும்கலெக்டருக்கும் பிராணசிநேகிதம், கலெக்டர் வீட்டிலே இருக்கிறநாய்க்குட்டிகூட, செட்டியார் கொடுத்ததுதான் என்று பெரிய மனிதர்களெல்லாம் பேசுவார்கள். இந்த நாய்க்குட்டிகள், நமது "ஏஜண்டுகள்' போலஅல்லவா, அங்கே இருக்கும். இது தெரியாமல் சுகானந்தத்துக்குக்கொடு என்று பேசுகிருயே, பைத்யமே! அவன், இந்த நாய்க்குட்டி தரவில்லையே என்று கொஞ்சம் கோபித்துக் கொள்வான், அதனலே நஷ்டம் என்ன? கலெக்டர் வீட்டிலும், ஆபீசர்வீட்டிலும் இந்தக்குட்டிகள் போய்ச் சேருவதால் வருகிற இலாபம் எவ்வளவு! அதைக்கவனிக்கவேண்டும்.

வியாபாரியின் பெண்தான், இருந்து என்னபயன், சூக்ஷமபுத்தி இல்லையே உனக்கு" என்று செட்டியார் உபதேசமே செய்துவிட்டார். தேவா தெளிவு பெற்றுள், தகப்பனர் காட்டியவழி சரி என்றல்ல, அவர், ஓர் பணம் திரட்டும் கருவி என்ற தெளிவு பெற்ருள், ஏழையும் செல்வவானும் இணைபிரியாநண்பர்களாக இருப்பினும், இளமை முதலே பிராண சிநேகிதர்களாக இருந்தாலும், இருவர் உலகமும் வேறு வேறு, எண்ணம், ஏற்பாடு, திட்டம் தத்துவம் சகலமும் வேறுவேருகத்தான் இருக்கும்என்பதை அறிந்தாள், அன்றிரவு அவளையும் அறியாமல் கண்ணீரும் சிந்தியது, அந்த அளவு உருக்கம், காரணமில்லாமல் பிறக்கவில்லே; சிங்காரத்திடம்தேவாவுக்குக் காதல் அதற்கு முன்பே பிறந்து தவழ்ந்து கொண்டிருந்தது! கலெக்டர் வீட்டிலே வாழவேண்டிய நாய்க்குட்டியை, கடன்சுமை ஏறிக்கிடக்கும் வீட்டிலே கொண்டுவரச், சிங்காரம் முயற்சித்தான், மாளிகையிலே வாழ வழி வகுத்துக்கொண்டிருந்தார் சுகானந்தம் தன் மகளுக்கு, அவள் அந்த மண்சுவர் வீட்டிலே தன் 'மனேஹரன்' இருக்கக் கண்டாள்! நாயைக் கொண்டே, 'இலாபம்' பெறும் எண்ணங்கொண்டவரின் மகளுக்குக், "காதல்" பூத்துப்பயன்என்ன? கருகும், அல்லது அவர் கசக்கிவீசிஎறிவார் கோபத்தோடு!

* * *

"அடுத்த தடவை" வந்தது, சிங்காரத்தின் சார்பிலே தேவா, மனு போட்டாள். இம்முறை தாயார் அதை நிராகரித்தாள், கடுமையான பேச்சுடன்.

'ரொம்பஇலட்சணந்தான்! அதுக பாவம், ஏழைக. அதுகவீட்டிலே நாயைக்கொடுத்தா, என்ன ஆகும். பாலும் பிஸ்கட்டும், வாங்கப்பணம் ஏது? நாய் நாலுநாளிலே சாகும்." என்றுள் தேவாவின் தாயார். உண்மைதான், ஆனல் உள்ளத்தைக் குமுறச் செய்யும் உண்மை. பாழாய்ப்போன ஜுலியா கர்ப்பமாகாமலிருக்கக்கூடாதா, குட்டியும் பிறந்து, அவருக்குக்கொடுக்கமுடியாது என்றும் சொன்னல், அவர் எவ்வளவு வேதனைப்படுவார்பாபம், என்றுகுழம்பிக்கொண்டிருந்தாள், தேவா. 'அவர்,' அதாவது சிங்காரம், அடுத்தவீட்டுஅன்னத்துக்கும் தனக்கும் மார்கழி போனதும், கலியாணம் என்ற ஆசையிலே இருந்தான். நாய்க்குட்டி ஆசையும் விடவில்லே. மறுபடியும் செட்டியார்வீட்டுக்கு நடந்தபடிதான் இருந்தான். ஊரிலே எந்த ஆபீசரும் இணங்கவில்லே, நாய்க் குட்டியை ஏற்றுக்கொள்ள. எனவே, "பழையசிநேகிதம் மறக்கலாமா" "கவர்னரே கேட்டால்கூடத் தர

(7-ம் பக்கம் பார்க்க)



உறையூர்

# எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறிகலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-ந. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமி கோவில் தெரு,
உறையூர் p.o. திருச்சி.

## வெண்ணெய்வைத்து

8-ம் பக்கத் தொடர்ச்சி

லையா தனியாக? "அதிலே இது" தேடுவானேன், அதற்கு ஈன்று தனித்தனியாக ஏடுகள் இருக்கும் போது? இவர்கள் அந்தக்காரியத்திலே இறங்குவானேன்? சரிதப்பேராசிரியர் சரிதம் பேசட்டும். புராணம் படித்தவர், அதைமட்டும் பேசுவது, ஏதோ அவர் கற்ற வித்தை என்றுபோகும். புராணத்திலே சரிதம்காட்ட ஒருதமிழ்ப் பண்டிதர் முயல்வானேன், சரிதம் இருக்க, சரிதப் பேராசிரியர்கள் இருக்க? அந்தத்துறைக்கு இவர் நுழைவானேன்? அதிலும் புராணப் பளுவைச் சுமந்துகொண்டு வருவானேன்?

★

காரணம் ஒன்று இருக்கிறது! காலையிலே விற்பனையாகாத இட்லியை, உடைத்துஉதிரியாக்கி, மாலையிலே கொஞ்சம் மசாலாபோட்டு' மாறுபெயரும் வைத்து விற்கமுயலும், ஊர்க்கோடி உண்டிக்கடைக் காரனின் உள்ளப்போக்கு, நமது நண்பர்களுக்குப் பிறந்துவிட்டது. புராணப் பிரசங்கம், விலைபோகாமல், ஜில்லிட்டுப்போன "இட்லி," நமது நண்பர்கள் நடத்தும் பேச்சுக்கடையிலேயோ வேறுபண்டம் இல்லை, என்ன செய்வார்கள்? கைவசம் தங்கிவிட்ட பண்டத்தைவிற்காவிட்டாலோ, கைமுதலுக்கு நஷ்டம், எனவே, 'மசாலா' போடுகிறார்கள், கொஞ்சம் சரித்திரம், கொஞ்சம் சீர்திருத்தம், இவைகளைக்கலந்து, புதுஉருவாக்கி, விற்பனைக்குக்கொண்டு வருகிறார்கள். வீண்வேலையாகவே இதுவும் முடியப்போகிறது என்பதையும் விரைவிலே உணரப்போகிறார்கள்!

★

புலவர் இராசமாணிக்கனார், பேசினாராம், "சேக்கிழார், சாமான்யரில்லை; மந்திரி! ஆகவே அவருக்கு நாடெங்கும் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு இருந்தது. எனவே அவருடைய நூலிலே வரலாற்றுஉண்மைகள்மிளிர்கின்றன" என்று. இதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறதோ எனக்குத்தெரியவில்லை! மந்திரியாக இருந்தது ஆச்சரியப்பட வேண்டிய செய்தியா, இல்லை. அவர்நாடு சுற்றிப்பிறகே ஏடுஎழுதினார் என்பது ஆச்சரியத்துக்கு உரியதா? எதைக்கருதிப்புலவர், மூக்கின்மேல் விரல் வைக்கிறார், நம்மை எல்லாம் வைக்கச்சொல்லுகிறார்என்றுஎனக்குத்தெரியவில்லை. சேக்கிழார் மந்திரியாகஇருந்து, மண்டலம்பலசுற்றியே, நூல்எழுதினார்என்று இருக்கட்டும், அதுபோதுமா, ஏடு, நாடுஏற்றுக்கொள்ளவேண்டியது, இன்றியமையாதது, இந்தக்காலத்துக்கு ஏற்றது, என்றுவிளக்க! மந்திரியாரா எழுதினார், அப்படியானால் மறுமொழிபேசாமல் அந்தநூலைக் கண்ணிலே ஒத்திக்கொள்ளவேண்டியதுதான், என்றுஎண்ணும், ஏமாளிகள் எவ்வளவுபேர் கிடைப்பார்கள்என்நண்பருக்கு. ஏமாளிகளின் புன்சிரிப்பும் கைதட்டுதலும் சிரக்கம்பமும், பெறுவதற்கா இவ்வளவு படிப்பு, பட்டம், பாடு, ஆராய்ச்சி, செச்சே! நான் அந்த நண்பருடைய வரவுசெலவுக்கணக்குப் புள்ளி போட்டுப்பார்த்துத் துக்கமடைகிறேன்—கொஞ்சம் வெட்கம்கூடத்தான்; எவ்வளவு வீண் வேலை அவருக்கு! போகட்டும், இந்தக்கருத்தையாவது, இவர் கண்டுபிடித்துக் கூறினாரா, என்னமோ அவருடைய சக்திக்கேற்றஅளவு அவரும்ஆராய்ச்சி செய்தார் என்று மகிழ! அதுவுமில்லை! பெரியபுராணத்திலே சரித உண்மைகள் புதைந்து உள்ளன என்ற கூற்று, புலவர் கூறுவதற்குப் பன்னெடு நாட்களுக்குமுன்பு, "பழையபண்டத்தைப்புதுஉருவாக்கும் பலசரக்குக்கடையின்" ஆதீனகர்த்தாபோன்ற, திரு. வி. கலியாணசுந்தரனார், தமது 'பெரியபுராணம்' எனும் ஏட்டில்,

"பெரியபுராணம் பௌராணிகத்தை வித்தாகக்கொண்டு எழுந்த நூல் அன்று. அது சரித்திரத்தை வித்தாகக்கொண்டு எழுந்த காவியம். கல்வெட்டுகளையும், வேறு பல சான்றுகளையும் ஆராய ஆராயப் பெரியபுராணம்சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்ட நூல்என்பது நனி விளங்கும்" என்று தீட்டிவிட்டார். அந்தத் திருவாய் மொழியினைக்கூறுவதுதானா, இந்த ஆராய்ச்சியாளரின் திருப்பணி! ஆமெனில், இதனை ஏழுரூபாய் செலவிலேதெரிந்துகொள்ளலாமே, இரவு பகல் படித்து, இன்னின்ன பரீட்சைகளுக்கு இன்னின்ன பட்டம்என்று அறிந்து, தேகம் இளைக்கப்படித்துத்தேறியது, வீணாகிறதே. மலையைக்கல்லி எலி பிடிப்பானேன், அதுதான் வயல்வெடிப்பிலே உலவுகிறதே!

★

சரித்திரம், என்றால் என் நண்பர்கள் என்னவென்று கருதுகிறார்களோ தெரியக்காணோம். எதிலும் அதுதேடும் வேலையிலே ஈடுபடுகிறார்கள். ஏனோ? சரித்திரத்தைத்தனியாகக்கூறும் ஏடுகள், படிக்கச் சுவை இல்லையோ? புரியவில்லையோ என்றும் கேட்பேன், கோபிப்பரே, என்று கேளாதுவிடுகிறேன். தமிழகத்தின் தாழ்நிலைஇப்படியா இருக்க வேண்டும், வரலாற்றுக்காக வளை பலநுழைந்து தீரவேண்டுமாமே! நுழைந்துதான் தொலைகிறார்களே, தமது நுண்ணறிவினால் கண்டுபிடித்த வரலாற்றுத் துண்டுகளைத் தொகுத்து, வெறும்சரித நூலாக்குவதுதானே! ஏன் பழையபுராணத்தோடு அதனை மறுபடியும் கலந்து பரிமாறுகிறார்கள்! காரணம் இதற்கும் இருக்கிறது. தமிழ்ப்புலவர், வரலாற்றுப் போதகாசிரியர் வேலை செய்வதை, பெரும்பாலோர் ஏற்கமாட்டார்கள் அல்லவா? டாக்டருக்கு தோட்டச்சுவர் எப்படிக் கட்டவேண்டும் என்று தெரிந்திருக்கலாம், ஆனால், அவரிடம்மருந்துக்குப்போவார்களேதவிர, கட்டிடப்பிளானுக்குப் போகமாட்டார்களல்லவா! அதுபோலவே, இதுவும். மேனாட்டுப்புலவர்கள் யாராவதுஇன்று "பால்பாடிய பாவும் பசிபிக்கடலும்," "பீடர்பாடியபாசுரமும் பிரிட்டானிய சரிதமும்" என்று பேசிக்கொண்டிருக்கிறார்களா குங்கிலியக்கலயநாயனாரும் குறுநிலமன்னர் வரலாறும் என்று இங்கு இவர்கள் பேசிக்கொண்டிருப்பதுபோல. புலவர், என்றால், துறைகளைப் பிரித்துக்கொண்டனர் அங்கு. இங்கு புலவர், என்றால், பாமரனிடம் தமது பேச்சழகைக் காட்டுபவர் என்ற அளவிலேநிறுத்திக்கொண்டனர். இல்லை என்றால், எந்த ஆதாரத்தைக்கொண்டு, சரிதத்துறைக்கென்று தனி ஆராய்ச்சியாளர்கள் இருக்கும்போது, புராணஏடு படித்தோர், சரித உண்மைகளைச் சபைகளிலே வீசத்துணிகிறார்கள் என்றுகேட்கிறேன். கணித மேல் படிப்பிலே நேர்க்கோடு, குறுக்குக்கோடு, வட்டம் முதலியன உண்டு, அதற்கான பேராசிரியர்களும், பாடப் புத்தகங்களும், உண்டு; ஆனால், நீறுபூசியும் நாமதாரியும் பொட்டுக்காரரும், குறுக்குக்கோடு, நேர்க்கோடு, வட்டம், என்ற கணிதசாஸ்திர உண்மைகளையே நாங்கள் தரித்துக்கொண்டு இருக்கிறோம், ஆகவே, மதக்குறிகளிலே கணித உண்மைகள்உண்டு என்று பேசுவது முறையா? பேசினால், நண்பர் பொறுத்துக்கொள்வாரா?

★

அப்படித்தான், அவர் காட்டிய அரிய பெரிய சரித உண்மைகள் என்ன? பெரியபுராணத்திலே "தொண்டர்கள்" இருந்த இடங்களும், ஆங்கு நடைபெற்ற சிலபலநிகழ்ச்சிகளும், ஆண்ட அரசர்களும், வரலாற்றுத் துணுக்குகள்தான், என்பதைவிளக்கக் கல்வெட்டுகள் உள்ளனவாம்! இருக்கட்டுமேகல்வெட்டுகள்! அவைகளிலே, இயற்பகை இல்லக்கிழத்தியை இறைவன்பின் அனுப்பியதும், சிறுத்தொண்டன் சீராளனைக் கறியாக்கியதும், நாள் நேரத்தோடு பொறிக்கப்பட்டும் இருக்கட்டுமே, அதனால் என்ன ஏற்பட்டுவிடும்? அதைக்கூறி எந்தஉண்மையை ஸ்தாபிக்கவிரும்புகிறார்? ஜார்மன்னன், மக்களை அடிக்கஉபயோகித்த சவுக்குக்கண்டுபிடிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம், அதனால் ஜார், உத்தமன் என்று தீர்ப்பளிப்பதா? இன்றுள்ள நிலையிலே, புராணக்கதைகள்தேவையா? அவைகளிலே காணப்படும் செய்திகள்நடைமுறைக்கும்நாட்டு முன்னேற்றத்துக்கும் ஏற்றதா? நல்லறிவாளர், நாதனுக்கும் ஜீவனுக்கும் இருக்கவேண்டிய தொடர்பை, அந்தக் கதைகளைக்கொண்டுநிர்ணயித்துக்கொள்வதா, என்பது பிரச்னையாயிருக்க, சேக்கிழார் மந்திரி, ஊர்நாடு சுற்றினார், சரித உண்மைகள் உண்டு, கல்வெட்டும் காணலாம் என்று கதைபேசுவது, நேரக்கொலையே தவிர, அறிவுக்கு விருந்தா என்று கேட்கிறேன். பக்திக்கும் பித்தத்துக்கும்வித்தியாசம் இல்லையோ என்று எண்ணக்கூடிய கதைகளையும், நாட்டு மக்களிலே, என்நண்பர்போல் அந்தப்புராணங்கள்கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள்என்றுநம்புபவர்கள் உட்பட, யாருக்கும் அனுபவசாத்தியமாகாததும், இவைகளின் விளைவு இது என்று எந்தநலனையும் காட்டமுடியாததுமான, நடவடிக்கைகளை விஞ்ஞானம் ஓங்கி, விடுதலைக்கிளர்ச்சிவலுத்து, பகுத்தறிவு பூத்திருக்கும் இந்நாளிலே பேசுவதுபயன் உள்ள செயலா? பேசுபவர் கேட்பவர் இருவரிலே யாருக்காவது பயன் உண்டா? என் இந்த வீண் வேலை என்றுதானே கேட்கிறது வாலிப உலகு. கல்வெட்டு இருக்கிறது என்பதுதானா அதற்குப்பதிலுரை. என் நண்பர் புதுவை நாகமாணிக்கம்கூட, எனக்குக்கூறியிருக்கிறார், நண்பர்இராசமாணிக்கம் அவர்களுக்குள்ள விசேஷ ஆராய்ச்சி ஆர்வத்தைப்பற்றியும், அதற்கான சிலபல பிரத்யேகவசதிகளைத் தானே முன்னின்று அவருக்குச் செய்து தந்ததையும். அந்த ஆராய்ச்சி முடிவுகளைப்புராண ஆபாசத்துக்குப் புத்துயிர் தரவா பயன்படுத்துவது? வயோதிகன் சாப்பிடும் தங்கபஸ்பம், வாலிபத்தைத் தருவதில்லை, நரம்புக்குத் தளர்ச்சியைக் கொடுக்கும் நாளாவட்டத்தில் என்று மருத்துவர் கூறுவர். அதுபோலவே, புராணக்கிழத்துக்கு இவர் போன்றோர் ஊட்டும் மருந்தும், நின்றுமாய்க்கும்நஞ்சாகுமேயன்றி நிலைத்து வாழச்செய்யும் மருந்தாகாது. நண்பர் விரைவிலே டாக்டர் ராஜமாணிக்கம் ஆகக்கூடும், மற்றோர்பரீட்சைதேறி. ஆனால் மருந்து வகைஇதுபோலவே இருந்தால், அவருடைய பராமரிப்பிலே விடப்பட்ட புராண நோயாளி பிழைக்கமாட்டான். கைதேர்ந்த வைத்யர்கள், கைவிட்டனர், கடைசி காலத்திலே இவர்தன் 'கைராசியை' நம்புகிறார், பாவம்.

★

சேக்கிழார், தமிழகமெங்கும்சுற்றுப்பயணம் செய்தஅருமையைப் பெரிய புராணம் உணர்த்துகிறது என்று பெருமை கொள்வதற்குமில்லை. சேக்கிழார்மந்திரி, எனவே வசதி இருந்தது; சீனநாட்டிலிருந்து இங்குவந்து, நாட்டுநிலையை அறிந்து, இன்று நமக்கும் உபயோகமாகக் கூடிய அரிய உண்மைகளைத் தமது குறிப்புகளிலே தீட்டிய பாகியான், ஹுவான்சுவாங்போன்றவர்களை, இன்றுஅறிவுஉலகம்நமக்கெல்லாம் அறிமுகப்படுத்திவிட்டது. தமிழகத்திலேயே, காஞ்சியில் அரசபரம்பரையினரான போதிதருமர்என்னும் பௌத்த போதகாசிரியர் சீனா, ஜப்பான்நாடுகள்சென்று தத்துவபோதனை செய்தார், என்று அறிகிறோம். ஆல்பரினி, பார்போசா இபின்பதூதா, அப்துர்ரஜாக், போன்றவர்கள், தமிழகம்மட்டும் சுற்றித் தாளச்சத்தத்தைமட்டும் கேட்டுக் கதை தீட்டியவர்களல்ல—நெடுந்தூரம், பலநாடுகள் கடந்து சென்று, நாடுபலவற்றின்வரலாறுகளை வரைந்தவர்கள்! இந்நிலையிலே, மந்திரியாக இருந்த சேக்கிழார் தமிழகத்தைச் சுற்றிப்பார்த்தார் என்பதை உச்சிமீதுவைத்துக் கொண்டாட முடியுமா? அப்படித்தான் சுற்றினாரே, இவரோ ஒரு மந்திரியார், ஏடும் எழுதினார், அதிலே, நாட்டுநிலையை, பல்வேறு நிகழ்ச்சிகளைத் தீட்டும் பாகியான் டைரிபோல் தயாரிக்கக் கூடாதா, பல்கலைக்கழகங்களிலே, கொலுஇருக்குமே. பக்தர்களைப்பற்றித் தீட்டினார். இதனைக்கொஞ்சம்புலமையுள்ள எந்தப் பண்டாரமும் தீட்டலாமே, மதியுள்ள ஒருமந்திரியாரா இந்தவேலையில் ஈடுபடவேண்டும்? அநபாயசோழனின் அருமைமந்திரியார் சேக்கிழார், அவர்எழுதியது, அநபாயன் சரிதமல்ல, சோழமன்னர்வரலாறு அல்ல, சோழநாட்டுவரலாறுமல்ல, சோறிட்டுச் சோர்ந்து போனபக்தன், நீறுகண்டு நிலைதவறிய மன்னன், துணிபெற்று மண்டையை மோதிய பக்தன், மனைவியின்தாலியைவிற்று குங்கிலியம் வாங்கிய நாயனார், உருண்டுஉடல் தேய்ந்த அம்மையார், பெண்டு பிள்ளையைக் கொன்று பெம்மானைக்கண்டபெருவீரன், கண்ணைத்தோண்டிக் கற்சிலைக்கு அப்பியவேடன், இத்யாதி, இத்யாதி...............! இது மந்திரியார் தீட்டவேண்டிய வரலாறு?

★

ஏதோ ஒன்று அவரால்ஆனகாரியம் அது, நாடு சுற்றி நாயனார்களைப்பற்றிய ஆராய்ச்சிசெய்துதீட்டினார் ஒருநூல் என்பது திருப்தி கொள்வதற்குண்டா? இல்லை! அவர் தீட்டியது முதல் நூலுமல்ல, வழிநூல்! நமது மொழியா அது? இல்லை, புலவர்கள் போற்றும்மொழியினைக் கொண்டு கூறுகிறேன்.

"திருநாரையூரில் நம்பி யாண்டார் திருவந்தாதி கடைப்பிடித்து" என்பது என்மொழியல்ல. நம்பியாண்டார்நம்பி என்பவர், இந்தத்தொண்டர்களைப்பற்றி முன்பே கூறினார். அதைக்கடைப்பிடித்து சேக்கிழார் எழுதினார். நம்பியாண்டார் நம்பி கதைகளைக் கூறினார் என்பதுசரி, ஆனால் அதனைக் "காவியரசனையோடு" பாடிய பெருமை சேக்கிழாருடையதல்லவா, என்று கேட்பார் நண்பர். அதற்கும்வழியின்றி, எப்படிப் பாடுவது என்று சேக்கிழார் தில்லையிலே நின்றுநடனசபேசனை வேண்டியதாகவும், அவர் அருள் பாலித்து, "உலகெலாம்" என்று முதலடிஎடுத்துத் தந்ததாகவும், அவரே கூறுவார். ஆகவே பெருமைக்குரியது, ஐயனின் அருட்செல்வமேயன்றி, மந்திரியாரின் புலமையாமோ! அஃதும் இல்லை

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி 6—1—46 ஞாயிறு

# கோடு உயர்ந்தது! குன்றம் தாழ்ந்தது!

கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது! கோடு, குன்றம்இரண்டும் ஒரேபொருளைக் குறிக்கும் சொற்களன்றோ என்பர் அன்பர். உண்மை. அதுபோலவே இங்கு நாம் விளக்க எடுத்துக்கொண்டபிரச்னை சம்பந்தப்பட்டமட்டில்,உயர்ந்தது தாழ்ந்தது, என்னும் இருசொற்களும், கூர்ந்து நோக்கும்போது, ஒரே பொருளையே தருவதும்விளங்கும்.

எந்தப்பிரச்னை? எந்தக்கோடு?எந்தக்குன்றம்? ஆச்சாரியார்பிரச்னை! திருச்செங்கோடு! திருப்பரங்குன்றம்! இவையே சிலபல திங்களாக வீடு, நாடு, மன்றமெங்கும் பேசப்பட்டவை. இதுபோது திருச்செங்கோடுதேர்தல் செல்லுபடியாகக் கூடியதே என்று ஏற்பட்டுவிட்டபடியால், கோடு உயர்ந்தது என்றோம், திருப்பரங்குன்றத்திலேகாங்கிரஸ் ஊழியர்கள்கூடிச் செய்த முயற்சி இதன்பயனைய் முறிகிறதாகையால், குன்றம் தாழ்ந்தது என்றோம். இதுதானா? இதைஏனோ,முதலிலேபுரியாதபடி கூறத்தொடங்கினீர்என்றுகேட்பீரேல்,கூறுவோம், இந்தப் "பிரச்னையை" அதற்குநேரடியாகச் சம்பந்தப்பட்ட கட்சியினர், மக்கள் புரிந்துகொள்ளக்கூடாதுஎன்றநினைப்புடனேயே,பேசிவந்தனர். மக்கள், எங்கே, இந்தப் பிரச்னையைக்கூர்ந்து நோக்கி, உட்பொருளைத்தெரிந்து கொள்கிறார்களோ என்று அச்சம்கொண்ட ஆச்சாரியார், செல்லுமிடமெங்கும் "வெல்லமொழியிலே" இது சாமான்யவிஷயம்! இதுபற்றி நீங்கள் சிந்திக்கவேண்டாம்! தேசப் பிரச்னையைக்கவனியுங்கள்" என்றுபேசிவந்தார். வெல்லமொழிஎன்று குறிப்பிட்டது, இனிமை இருந்தது, ஆனால்கொஞ்சம் மட்டரகமானது அந்தஇனிமை என்பதைக் குறிப்பிடத்தான்.

ஆச்சாரியாரால் "சின்னவிஷயம்" என்றுகுறிப்பிடப்பட்ட பிரச்னை,உண்மையில் அப்படிப்பட்டதா, மக்கள் யோசித்துப்பார்க்கவேண்டிய அவசியமில்லாத சாமான்யப் பிரச்னைதானா? இல்லை! மிகச்சாமான்யப்பிரச்னையாக இருந்திருப்பின், தமிழகத்திலேகடந்தசில திங்களாக ஒருகிளர்ச்சி இருந்திராது, பத்திரிகைகளிலே, தூற்றல்மொழிகள் குவிந்திராது, அசப்அலி வந்திருக்கவுமாட்டார். பிரச்னை, பெரிதுஎன்பதுமட்டுமல்ல, போர், புகைப்படலத்துக்குப்பின்புறம் நடத்தப்பட்டது; மக்கள் கண்களுக்கு அமளியின்போக்கு தெரியக்கூடாதுஎன்பதற்காக. மதியூகமுள்ளமன்னன், தன்படையிலே புரட்சிகிளம்பினால், வெளியே தெரியவிடாமலேயே, புரட்சியை அடக்கப் பார்ப்பான்; ஆச்சாரியாரும் அதுபோலவே, இந்தப்பிரச்னையை மூடிவைத்தார்.

பிரச்னையோ, முக்கியமானது, ஒரு மூலாதாரப்பிரச்னையின்விளைவு. எரிமலைகக்கிய தீக்குழம்பு இன்று ஆறிவிட்டது, ஆறுவதற்கு முன்பு எதிர்ப்பட்ட பொருளைக் கருக்கியும்விட்டது, அதுமட்டுமல்ல, தீக்குழம்பு மீண்டும் கக்கும் நிலையிலே யேஎரிமலை இருக்கிறது. இதனைச் சிறு பிரச்னை என்று ஆச்சாரியார் கூறுவது, சிறுமதியாலல்ல, மக்களின்மதியைச்சிறிதாக்க! நடந்தது என்ன? வேவல்பிரபு, மாளிகைக்குள்ளே நுழைவதா கூடாதா என்று,அவருடையமெய்ப்பாதுகாவலர், உத்திரவிட ஆரம்பித்தனர் என்றால் தூக்கிவாரிப் போடுமல்லவா? அதுபோலவே, தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத்தலைமை பூண்டுநடத்தத்தகுதியும்திறமையும் உள்ளவர் தவக்கோலக்காந்தியாரின் சம்பந்தி என்ற நிலைபெற்றவர், தத்துவார்த்த உரையும் தாத்தாக்காலக் கதையும் கூறி, தகர்ந்து போனகொள்கைகளைஎல்லாம்கூட நாட்டிலே விலைபோகச் செய்பவர், வேதியகுலச் சிரேஷ்டர், வாதாடுந் தொழிலிலே வல்லவர், பிரச்சாரயந்திரங்கள் சகிதம்பக்தகோடிகள் வரவேற்க,பட்டிணப்பிரவேசங்கள் நடத்திவந்தவராம்ஆச்சாரியாரைஇரண்டாம்காந்தியாரை, கட்டளைத்தம்பிரானை, காமராஜர், மடாலய காரியகர்த்தா, உள்ளே நுழையாதே, என்று கூறினால், தூக்கிவாரிப் போடாதா?நடக்கக்கூடியகாரியமா, என்றே எவரும், நடந்ததற்கு முன்னாள்வரை கூறியிருப்பர். ஆனால் நடந்தது! தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜர், ஆச்சாரியார், திருச்செங்கோடு, கமிட்டிமூலம், காங்கிரசில் நுழைந்தது தவறு, என்று கூறினார், தடைவிதித்தார், படைதிரட்டினார் ஆச்சாரியார், விடை இறுத்ததுகாமராஜரின்படை,திருப்பரங்குன்றம் நடந்தது, "கோபாலசாமிகள்" நடந்தன! இது,சாமான்யப்பிரச்னையா? சீ. ஆர். கட்சியா? காமராஜ் கட்சியா? திருச்செங்கோடா? திருப்பரங்குன்றமா? என்று கேட்காத இடமோ, நாளோகிடையாது! இதனைத்தான் ஆச்சாரியார், "மக்கள் கவனிக்கவேண்டிய அவசியமில்லாத விஷயம்"என்று கூறிவந்தார், ஏன்? மக்கள் கவனிக்க ஆரம்பித்தால், சி. ஆரா? காமராஜா? என்று கேட்பதோடு நிறுத்தமாட்டார்கள், ஐயரா,நாடாரா? என்று ஆரம்பிப்பர், பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதவரா? என்று மேலால் பேசுவர், முடிவில் ஆரியரா? திராவிடரா? என்ற மூலப்பிரச்னைக்கே வந்துசேருவர்; இதைத்தடுக்கவே ஆச்சாரியார், இதுசாமான்யமான பிரச்னை, என்று கூறினார். ஆனால், மக்கள், இதனால், சிந்திக்காமலே இருந்துவிட்டனர் என்று ஆச்சாரியார் கருதினால், அவர் ஏமாளியாவார். மக்கள் மிகக்கூர்ந்து கவனித்தனர். திருச்செங்கோடு ஆதரவாளர்கள், நமது இயக்கத் தலைவர்களைக்காணும்போதெல்லாம், 'கிண்டியில்தோற்றவன்,' போலக்காட்சி தந்தனர்; திருப்பரங்குன்றத்துக் கட்சியினர், போட்டிப் பரிசிலே வெற்றி பெற்றவர்போல விளங்கினர். திருச்செங்கோட்டாரின் திருவிழிகள் "உன் முகத்திலே விழிக்கவேண்டுமா" என்றுகேட்டன நம்மை நோக்கி; குன்றத்தாரின் கூத்தாடும் கண்களோ, "இப்போது என்ன சொல்கிறீர்கள்!" என்று நம்மை நோக்கிக் கேட்டன. இது, சர்வசாமான்யமான, சின்னவிஷயமானால்,'இனம்இனத்தோடு'என்ற நிலையே ஏற்பட்டிராது. இருகட்சியின் படைபல விசேஷத்தைக்கவனிப்பவர்கள், இதிலே "இனப்பிரச்னை"இருந்ததை அறிவர், அறிந்தும் சிலர்மறுப்பர்விளைவுஎண்ணிஅஞ்சி அறியுாதாரும் இருப்பர், புரியாத காரணத்தால்.

இந்தப்பிரசனையின் உட்கருத்து இருக்கட்டும், இந்தப் போரிலே, வீசப்பட்ட'வாசகங்களைக்'கவனிப்போம், மிகச்சாதாரணப் பிரச்னைக்காகவா, கடுஞ்சொற்கள், நஞ்சுதோய்ந்த சொற்கள், வீசப்படும்! காமராஜரோ,ஆச்சாரியாரோ,'மட்டரக' வேலையிலே ஈடுபட்டவர்களா? ஒருநாட்டை மீட்டிடும் படைத்தளபதிகளாயிற்றே! அவர்கள், 'சின்னவிஷயத்திலே' ஈடுபட முடியுமா, நேரமிருக்குமா? உண்மையில் பிரச்னை, அடிப்படை உண்மையின் விளைவு. அடிப்படை உண்மை, ஆரிய–திராவிடப்போர்; காங்கிரஸ் ஆரிய ஆதிக்க அமைப்பு என்பது.இதனைஉரத்தகுரலிலே மறுத்து 'உத்தமர்கள்' என்று ஊராரிடம் 'விருது' பெற்ற வீரர்களெல்லாம், வழக்கமாக, ஆரியதிராவிடப்போர் பிரச்னைபற்றிப்பேசும் நமது இயக்கத்தவர், பேசக்கூசும் மொழிகளைத்,தாராளமாக வீசிக்கொண்டனர். இன்று 'சுமுகமான முடிவு' ஏற்பட்டுவிட்டது, என்று இருசாராரும் களிக்கக்கூடும்! களிப்பு இருப்பதாகக் காட்டிக்கொள்ளாவிட்டால், திராவிட இயக்கத்தார், இப்போதாவது தெரிகிறதா ஆரிய—திராவிடப் பிரச்னையின் உண்மை என்று கேடபரே என்ற அச்சம்.

எப்படியேனும்போகட்டும், எதைக் கொண்டேனும் மூடட்டும்தங்கள்முகாமுக்குள்ளே நடக்கும் அலங்கோலம் வெளியே தெரியாதிருக்க. நாடு, மறுபடியும் காணவேண்டிய அவசியமில்லாத அளவுக்கு'அந்தஅவலட்சணத்தை' மக்கள்பார்த்துவிட்டார்கள்.

சூக்ஷமபுத்தியுள்ள எல்லோருக்கும்,

1. ஆச்சாரியார்—காமராஜர் சண்டை
2. காமராஜரின் கைஓங்கியது
3. கல்கத்தாவுக்கு டாக்டர் ராஜன் தலைமையில் பார்ப்பனர், காவடிதூக்கிச் சென்றது.
4. அசப்அலி அனுப்பப்பட்டது.
5. அவர் அளித்த தீர்ப்பு.
6. அதன் பயனைத் தேர்தல் கமிட்டியை ஆச்சாரியாரைக் கலந்துபேசிஅவருடைய சம்மதம் பெற்றுக், காமராஜர் அமைத்தது.

என்ற நிகழ்ச்சிகள் தெரியும்,ஒவ்வொன்றும் ஒவ்வொரு நினைப்பைத் தந்துதான்இருக்கும்

"என்ன இது, இவர்கள் இருவருக்குள் சண்டையா? காமராஜர் அப்படியொன்றும் சண்டைக்காரரல்லவே. சாது தியாகி" என்று துவங்கியநினைப்பு

"ராஜாஜி எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தால் தான்என்ன? காங்கிரசின் கட்டுப்பாட்டைஅவர் உடைத்தார், அதை எப்படி மறப்பது. அவரை ஆதரித்துச்சிலர்பேசியும் எழுதியும் வருகிறார்கள். பணம் வேலை செய்கிறது! ஆனால் நாடு காமராஜரின் பக்கம் இருக்கிறது. சத்தியம்ஜெயிக்காமல்போகுமா?" என்று வளர்ந்து,

"பார்த்தீர்களா இந்தப் பார்ப்பனர்கள் செய்தகாரியத்தை?தமிழ்நாடு முழுதும் காமராஜர் பக்கம் சேர்ந்தது, கடைசியில், இந்தடாக்டர் ராஜன், சில பார்ப்பனர்களை இழுத்துக்கொண்டுகல்கத்தாவுக்கு ஓடுகிறார், காமராஜர்மேல் கோள் சொல்ல. இந்தக் கூட்டத்தின் சுயஜாதி அபிமானம்இப்படிஇருக்கே! ஒரு தமிழனையும் தலைதூக்கவிடவில்லையே இந்தக் கும்பல். காங்கிரஸ், இந்த ஜாதிக்கு ஆதிக்கம்தேடுவதற்கா இருக்கிறது!" என்று—மாறி, அசப் அலிசென்னை வந்ததும், "பார்த்தீர்களா அக்ரமத்தை? இங்கேதங்கள் ஜம்பம் சாயாது போகவே வடநாட்டிலே இருந்துஇறக்குமதிசெய்கிறார்கள்அசப் அலியை' என்று கசப்புடன் பேசி, அவர் தீர்ப்பளித்தபோது கோபமும் வெட்கமும் கொண்டுமௌனமாகி கடைசியில் காமராஜர் ஆச்சாரியாரைக் கலந்து கமிட்டி அமைத்தார், என்ற நிலை ஏற்பட்டதும் பெருமூச்சு பிறந்தது! அந்தப் "பெருமூச்சு"—பெரும்புயலாக மாறும், இன்று இல்லாவிட்டால், நாளை!!

காங்கிரஸ், நாட்டு விடுதலைப் போரைநடத்தும்ஸ்தாபனம்என்று நம்பிஅதில் சேர்ந்து, பிறகு, அது வெறும் பார்ப்பனப் பாதுகாப்புச் சபை என்பதைத் தெரிந்து அதிலிருந்து விலகி பார்ப்பனியத்தோடு பலமானதோர் போர்தொடுத்தார் பெரியார்—போர் நடந்து வருகிறது—கடைசி சொட்டு இரத்தம் திராவிடன் உடலிலே இருக்குமட்டும் போர் நடந்தேதீரும். காமராஜர்கள், காங்கிரசிலே இருந்து தேசப்பணி செய்தனர்—ஐயனே! நீங்கள்தேசப்பணிஎன்று எண்ணிக்கொண்டுஎதைச்செய்கிறீரோ, அந்தக்காரியம், ஆரியப்பிணியைநாட்டிலே பரப்பவே பயன்படும்என்று பெரியார் கூற, காமராஜர்கள்,காங்கிரஸ் ஒரு ஜனநாயக ஸ்தாபனம், எனவே, பெரும்பான்மை மக்களாகிய திராவிடர்கள்காங்கிரசைக் கைப்பற்றி ஆரியருக்கு அதிலே ஆதிக்கமின்றிச் செய்துவிட முடியும் என்றனர், முடியவேமுடியாது ஏனெனில் முப்புரியினர், வடநாட்டவரைத் துணைக்கு அழைத்துநமது முயற்சியை முறியடிப்பர் என்று பெரியார் எச்சரித்தார்–காமராஜர்கள்சிரித்தனர்–அன்றுஇன்றுகதறுகின்றனர், அசப் அலி கொடுத்த அறைபெற்று.நியாயமும்சத்தியமும், உறுதியும் கட்டுப்பாடும், பிரச்சாரமும் சுற்றுப்பயணமும் எங்கே போயின! போட்டிக் கூட்டங்களும், தீட்டிய திட்டங்களும்என்னவாயின! நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற முழக்கம் ஏன் அடங்கிவிட்டது! எங்கே அந்தவீரம்? சரிந்தது! சரியத்தான் செய்யும். இது தெரிந்துதான், பெரியார், திராவிடர்காங்கிரசில் சேர்ந்துழைப்பதைக் கண்டித்தார். காமராஜர்கள் இனியேனும் கண்திறப்பரோ? நாம் நம்பவில்லை!

என்ன நடை பெறும்இனி? காமராஜரையும் அவருடன் கூடினவர்களையும்,இந்நாட்டுப் "பார்ப்பனர்" நமது பட்டியிலே பொறித்துவைத்துக் கொள்வர்—ஒருசமயம் வரட்டும் என்று காத்துக்கிடப்பர்—சமயம் வரும்படியாகவும் செய்வர்—வந்ததும் பாய்வர் — பாய்ந்தால், காமராஜரைப்பாதுகாக்க, வடநாடு ஆள் அனுப்பாது!

தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கு இவர் தலைவர்—இவருடைய தீர்ப்புக்குத் தமிழ்நாட்டுக் காங்கிரசாரின்பேராதரவுகிடைத்தது-தொண்டர்களின் ஆதரவு கிடைத்தது—கிடைத்தும் பயனற்றுப் போகும்படி, வடநாட்டுத் தலைமையந்திரம் வேலை செய்தது. இதற்குப்பணிந்தார்!—குற்றேவல் புரிவோர்கொற்றவனாக முடியுமோ! காமராஜரின் கரத்தின் பலம், குன்றத்தோடு முடிந்தது. வடநாடோ, காமராஜர் குனியுமளவு குட்டிற்று! இதுவா, தேசசேவை? இதற்காகவா,தியாகி கர்மவீரன் அஞ்சா நெஞ்சன் என்றெல்லாம்விருதுகள்பெற்றது!!

எவ்வளவு 'பாபக்கிருத்யம் செய்தாலும், ஆச்சாரத்தைமறந்தாலும், பிராமணனுக்குள்ள பிறவிஉரிமை போகாது என்பது மனுவின் திட்டம். அதே ஆட்சிதான் இன்றும் அமுலில் இருக்கிறது, ஆரிய பக்தி இருக்கிற காரணத்தால். ஆகவேதான், திருவிளையாடற்புராணத்தின்படி, தாயைப்புணர்ந்து தகப்பனைக் கொன்ற 'மாபாவி' ஒரு பிராமணனாகஇருந்ததுபற்றி,ஆலவாயப்பன், அருள்சுரந்து, அவன்பாபத்தைப் போக்கினார் என்று கதை இருக்கிறது. இங்கு, ஆச்சாரியார் எதை எதைக் காங்கிரசும், காமராஜர் போன்றமற்றத்தலைவர்களும், சிலாக்கியம்' என்றுகொண்டாடினரோ, அதனை அவர் கேலிசெய்தார், கண்டித்தார், கேவலப்படுத்தினார். ஆக

ஸ்ட்டுக் கலவரம், எமது ஜீவனின் ஆடிப்பு என்ருர்காமராஜர், ஆச்சாரியார், அது பித்துப்பிள்ளை விளையாட்டு என்ருர். ஆகஸ்ட்டு இயக்கத்தில் சேராதவர், அதனைச் கண்டித்தவர், ஆகஸ்ட்டுத் தியாகிகளைப்பழித்தவர் இந்தஆச்சாரியார்,இவரைத் தமிழ்நாடு ஏற்காது என்று கூவினுர். ஆச்சாரியாரோ, ஆகஸ்ட்டோடு ஆண்டுமுடிவடையவில்லையப்பா, என்ருர்! கடைசியில், காமராஜர் ஆச்சாரியார் மாளிகைக்குச் சென்று, அவரைக்கலந்து ஆலோசித்துச்சம்மதம்பெற்று, கமிட்டி அமைத்தார்! ஆச்சாரியார் மட்டுமல்ல பார்ப்பனர்களால், எதையும் 'ஜீரணம்' செய்துகொள்ளமுடியும். அவர்கள் விரும்பினுல் காந்தியாரை மகாத்மா என்பார்கள், இல்லையோ, வெறும் பனியா என்று தள்ளுவார்கள், உபயோகப்படுகிற வரையிலே காங்கிரசை ஆதரிப்பர், பயனில்லை என்ருல் அதனையே அழிப்பர், என்பதைக் காமராஜர்உணரவேண்டும். அவர் பட்டகஷ்டம் அவ்வளவும் அவருக்குப்'பிரம்மத்துவேஷி'என்ற பட்டத்தை வாங்கித் தந்ததன்றி, காரியத்திலே வெற்றி கிடைக்கவில்லை. நேரடியாகநின்று வெளிப்படையாகப்பேசி,பிரச்னையைமூடி வைக்காமல்ஆரியத்திராவிடப்போர் என்று நேர்மையாகக்கூறி, திராவிடர் ஒன்றுகூடினுலன்றி, காங்கிரசுக்குள்ளே இருந்தே போராடுவோம் என்று பேசுவது பயனற்றுத்தான் போகும். ஆச்சாரியாருடன் போராடியபோது காமராஜர், கேள்விப்பட்டதுஎன்ன? ஆச்சாரியார் ஒழிக்கப்படவேண்டியவர் தான், அவர் மண்டைக்கர்வி, பதவிப்பித்தம் பிடித்தவர்—என்றுபலரும் பகிரங்கமாகக்கூறினேர். திருப்பரங்குன்றத்திலே ஆச்சாரியாரை ஆதரிக்கவந்த ஒரு 'ஐயர்' அடிபட்டார்என்று வதந்திவந்தது. அவ்விதம் "கோபாலசாமி" ஏற்பட்டு, என்னசெய்யமுடிந்தது?

"தமிழ்நாடே!நீதகுதியைத்தான் ஆதரிக்கிருய்! நான்ஏழை, சாமான்யன், என்னுடன் கட்சிநடத்தும் ஆச்சாரியாரோ, பிரபலஸ்தர், காந்தியாரின்சம்பந்தி,ஆற்றல்மிக்கவர். ஆனுல், தமிழ்கமே! நீ அவருடைய ஜொலிப்பைக்கண்டு மயங்கவில்லை உழைப்புக்கே மதிப்பளித்தாய், தியாகிக்கேசிரம்சாய்த்தாய்உண்மைக்கேஉயரிய இடமளித்தாய், கட்சி பெரிது, ஆள் அல்ல; கொள்கை பெரிது, கட்டுப்பாடும் ஒழுங்கும் பெரிது என்றுதீர்ப்பளித்தாய். தமிழகமே!உனக்குத்தலைவணங்குகிறேன்" என்றுகாமராஜர்,கூறிமகிழ்ந்து, மெய்மறந்திருந்த வேளையிலேவந்து சேர்ந்தார் அசப் அலி; ஆச்சாரியார்-காமராஜர் தகருரைத்தீர்த்துவைக்க. "தகருரு" என்றபதத்தைப்பிரயோகித்ததே, தவறு. ஏனெனில், தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவர் காமராஜர். அவர், தமிழ்நாட்டுக்காங்கிரஸ் கமிட்டியின் பெரும்பான்மையோரின் அனுமதியுடன், ஒருதீர்ப்பளித்தார். கட்சியின் கட்டுப்பாட்டுக்காக அந்தத் 'தீர்ப்பை' ஏற்றுக்கொண்டிருக்கவேண்டியதேமுறை ஆனுல் ஆச்சாரியார், 'காமராஜர், தமிழ்நாடு காங்கிரசின் தலைவரென்ருல் எனக்கென்ன? பிரம்மகுலத்தவன் நான், நான்தவறு செய்ததாகவே வைத்துக்கொள்வோம், அதற்குத் தண்டனைதர 'காமராஜ்' துணிவதா, ஒரு திராவிடனுக்கு இந்தத் தைரியம்வருவதா?" என்று எண்ணினுர். தமது சகாக்களைக் கல்கத்தாவுக்குஏவினுர்; காமராஜர் முகத்தில் கரிபூசினுர். இதுபோலத்தான்நடக்கும். வீராதிவீரனையும் அந்தவீணர் குலம், இழிவுபடுத்தியதற்குஏராளமான சான்றுகள் உள்ளன என்று நாம் பன்முறை கூறினேம்—அதற்காகவே பழிக்கப்பட்டோம். நம்மைப்பழித்தவர்களின் நிலைஎன்ன இன்று? எப்படிப்பட்ட ஆச்சாரியார் என்று எண்ணிக்கொண்டு காமராஜர், போர்துவக்கினுர்! காமராஜரை ஆதரித்த ஏடுகள், ஆச்சாரியாரைப்படம்பிடித்துக் காட்டிய வைகளைக்கண்டபோது, காமராஜர், உண்மையிலேயேஊரின்கண்டனத்துக்கு ஆளான ஒருவரை நீக்குவது எளிது என்றுதான் எண்ணியிருப்பார். ஊராரின்கண்டனத்துக்கு ஆளான ஒருவரை நீக்குவது தன் நீங்காக் கடமை என்றும் கருதியிருப்பார். அவ்விதம் அவர் எண்ணும்படி எழுத்தோவியங்கள் பலதீட்டப்பட்டன.

எப்படியோ ஆச்சாரியார்அசப்அலியால்பிழைத்தார் என்றபோதிலும்அவரைமதிக்கக் காங்கிரஸ்தமிழர்கள்தயாராயில்லை. காங்கிரஸ் தமிழர்களின் மனப்புண் எவ்வளவு ஆழமாக இருக்கிறது என்பதற்குஇக்கிளர்ச்சிஓர் எடுத்துக்காட்டு.புண் இருப்பதுஉண்மை, ஆனுல் புன்னகையுடன் ஆச்சாரியார், உலவுவதும்உண்மை. அன்று—அசப் அலியின் தீர்ப்பின்படி—வடநாட்டார் தாக்கீதின்படி காமராஜர்,ஆச்சாரியார் வீடுசென்றபோது, எப்படிப்பட்டவரிடம் "கலந்துஆலோசித்துச்சம்மதம்பெற" நாம்போகிருேம், எவ்வளவு கர்ஜித்தோம், தமிழகம்எவ்வளவுகளித்தது, இருந்தும் என்ன, இதோ நுழைகிருேம், குனிந்ததலையுடன்; என்றுதானே கருதியிருப்பார்! உள்ளே உலவும் ஆச்சாரியார் என்ன எண்ணுவார், "வருகிருன் பார் வீராதி வீரன்! என்னை ஒழித்துக்கட்டக் கிளம்பிய சூரன்! கட்சிபெரிதுஆளல்லஎன்று மார்தட்டிய தீரன்! தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவன் வருகிருன். தாசர் குலத்துதித்தவன், பூசுரர் குலத்தவனும் என்னையன்ருே நீக்கலாம்என்று மனப்பால்குடித்தான, இப்போது, என்சக்தியை உணர்ந்து, உள்ளே நுழைகிருன், வீரத்தைமூட்டி கட்டி வைத்து விட்டு, என்றுதானேஎண்ணியிருப்பார். ஒரு விநாடிதான் இருக்கும் அந்த எண்ணம், ஆனுல்எப்படிப்பட்டவிநாடி! வீரன், விப்பிரருக்கு அடங்கிய விநாடி! தமிழகம் தலையைத்தாழ்த்தியவிநாடி! வடநாடு,திராவிடத்தை ஆட்டிவைக்கும் விபரீதத்தைவிளக்கும்விநாடி! வலையில் வீழ்ந்தமான் போல், காமராஜரின் கண்கள், திவலையுடன் இருந்த விநாடி! ஆச்சாரியாரோ அதுசமயம், மன்னர்களை ஆண்ட மனுபோல், சந்திரகுப்தனை ஆட்டிவைத்த சாணக்கியன் போல், சிவாஜியைப்பணியவைத்த கங்குபட்டர்போல,வெற்றிக்களிப்புடன் நின்று 'வரவேற்றிருப்பார்,' காமராஜரை! மறக்க முடியாத விநாடியல்லவா அது? ஆகவேதான் குன்றம் தாழ்ந்தது, கோடு உயர்ந்தது என்ருேம்.

ஆனுல் முடிந்துவிட்டதோ போராட்டம்.? இல்லை! முடிவுகிடையாது! ஆச்சாரியார் வேண்டுமானுல் 'கெட்டகனவு போன்றது அந்தப்பிரச்னை. அதனை இனி மறப்போம்' என்கிருர். பிரச்னை கனவு அல்ல, ஆரியருக்கு என்றென்றும் 'பிடி' இருந்தேதீரும் என்றநிலைவெறும்கனவாகப்போகிறது. காமராஜர் அமைத்த கமிட்டி, ஆச்சாரியாரைக்கலந்துதான் அமைக்கப்பட்டது; ஆனுல் அந்தக்கமிட்டி, களத்திலே ஒருபகுதிதான்என்பது இனி விளங்கும். ஒருமுறை அல்ல, இனியும் பலமுறை வடநாட்டுக்குக்காவடிஎடுக்கும் காட்சியும் காண வேண்டித்தான் இருக்கும். கோடு உயர்ந்து குன்றம் தாழ்ந்தது, என்ருல், நிரந்தரநிலை அல்ல! ஊசல்ஆடுகிறது!

இந்த "ஊசல் ஆட்டம்" கடைசியில், இருஇனங்களும் வேறுவேறு, முரண்பாடுகள் கொண்டது என்ற இனஎழுச்சிக்கருத்தை, முத்துரங்கங்களும் உணரும் நிலையைத்தந்து தீரும். கோடு உயர்ந்து குனறம் தாழ்ந்ததும், குன்றமும் கோடும் மீண்டும் மீண்டும்போராடும்கடைசியில், ஈரோடுமார்க்கமே திராவிடருக்கு ஏற்றதுஎன்றஉண்மையை விளக்கும். இது உறுதி.

★

## வெண்ணெய்வைத்து

6-ம் பக்கத் தொடர்ச்சி

வெட்டுக்கண்டேன், சரிதஉண்மை தெரிந்தேன் என்றுபெருமைபேசிக் கொள்ளவும், மனம் இடங்கொடுக்கிறதே, மக்கள் சமுதாயத்தைஎவ்வளவு மட்டரகம் என்று மதிப்பிட்டிருந்தால், அணுக்குண்டுக்கான ஆராய்ச்சியை நடத்திவிட்ட நாட்களிலே அமர்நீதி நாயனுர் கதையிலேபுதைந்துள்ள சரித உண்மையைக் கண்டு பிடித்துவிட்டேன் என்றுகூறிக்கொள்ளத்துணிவுபிறந்திருக்கும்! இவ்வளவும் செய்வது, தமிழர் வரலாறுக்குத் துணைதேடவும், சீர்திருத்தஆர்வத்தைப்புராண மூலம் காணவுமேயாகும் என்றும் செப்புகின்றனராம், செந்தமிழைச் சத்தற்ற காரியத்துக்குப் பாழாக்கும் அன்பர்கள்.இவர்தம்போக்கு மாருவிட்டால், நண்பன் என்ற முறையில் மாற்றவேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்படுகிறதே. அதைக் கூறுவதே இக்கட்டுரையின்நோக்கம், முதல்முயற்சி.அவர்கள் மேலும்முனைவரேல், "தொண்டர்கள்" ஒவ்வொருவராகப் பகுத்தறிவுத்தராசிலே நிறுத்திவைக்கப் பட்டு, அறிவு உலகுக்குக்காட்டப்படுவர், புராணம் பேசுவோரின் போக்கினுல் நாடு அடைந்த நாசத்தின் தன்மையும் விளக்கப்படும். நண்பர்கள், நடை அழகுகாட்ட, வேறு பொருளைநாடி, நாட்டைப் பாழாக்காது இருக்க வேண்டுகிறேன். என்சொல், நண்பனின் நல்லுரை, தவருக எண்ணிப்பழைய வழியே நடப்போம் என்று பிடிவாதம் பேசுவரேல்,நண்பர்களால் காப்பாற்றப்பட முடியாத அளவுக்கு, நாட்டுமக்களின் எதிர்ப்புச் சக்திகிளம்பும், என்பதையும் கூறுகிறேன்.

நண்பர்கள் புராணத்திலே புகுந்து சரிதம் காண்பது, வெண்ணெயைத்தலையிலேவைத்துக் கொக்குப் பிடிப்பது என்கிருர்களே, அது போன்றது! இது ஆற்றலுக்கு அறிகுறியல்ல.

### விளம்பரம்

### காஞ்சிபுரம் டிஸ்டிரிகட்டு முன்சிப்கோர்ட்டு

S. C. O. p. No. 71 OF 1945

1. மைனர் இராமகிருஷ்ணநாயுடு
By Next Friend And Mother
2. Nd petitioner.
2. பார்வதி அம்மாள்

மனுதார்கள்

மனுதார்கள் காலஞ் சென்ற கோபாலநாயுடுவிற்கு P. W. D. காண்டிராக்ட் விஷயமாக சர்க்காரில் இருந்து கிடைக்க வேண்டிய தொகைரூபாய் 1605க்கு வார்சு சர்டிபிகேட்டு கொடுக்க வேணுமாய் மனுக்கொடுத் திருப்பதில் ஆக்ஷேபனை உள்ளவர்கள்ஷை மனு ஈரங்கிதினமான 12-1-46-ல் ஷை கோர்ட்முன் ஆஜராகித்தெரி வித்துக்கொள்ளவும்.

மனுதார்கள்வக்கீல்.
கே. ஆர். [illegible]

போரில் வெற்றி!
ஏனவே சமாதானகால தேவை
களிலும் வெற்றி வேண்டும்.

ஆகையால்

குரு மருந்துகள்

இனி உங்கள்தேவைக்குக்கிடைக்கலாம்.

★

முக்கிய தயாரிப்புகள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| குரு தைலம் (210-வியாதிகளுக்கு) | 1 | 8 | 0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கு) | 0 | 5 | 0 |
| குரு களிம்பு (பத்து, படைகளுக்கு) | 0 | 14 | 0 |
| குரு ஆயுள்வேத லேகியம் | 2 | 0 | 0 |
| குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல்-காசங்களுக்கு) | 2 | 0 | 0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கு) | 5 | 0 | 0 |
| குரு சந்தான சோர்ணம் (ஸ்திரிகள் கர்ப்பரோகங்களுக்கு) | 5 | 0 | 0 |
| குரு குழந்தை செட் 7-மருந்துகள் (Children Set) (குழந்தைகள் ரோக-பாதுகாப்புக்கு) | 8 | 10 | 0 |

குரு மருந்துகள்
குடும்ப பொக்கிஷம்.

●

உங்கள் ஊர் மருந்து ஷாப்புகளில்கேளுங்கள்.இல்லாவிட்டால்,

டாக்டர்:

ஏ. மதுரம் சன்ஸ்.,
குரு மருந்து சாலை,
திருச்சிளுப்பள்ளி.

### மறைவு

ஒரத்தநாடு "திராவிடநாடு" ஏஜண்டு ஜி. நடராஜனின் மனைவிதங்கபாப்பா 27-12-45ல் திருத்துரைப் பூண்டியில் தமதுதந்தையார் இல்லத்தில் இயற்கைஎய்தினுர் என்கிற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிருேம்.

### திருப்பத்தூர்

30—12—45ல் வ-ஆ-திருப்பத்தூர் திராவிடமாணவர்கழகஆண்டு விழா, தோழர் சி. என், அண்ணுத்துரை அவர்கள் தலைமையில்மிகவும் சிறப்பாகநடைபெற்றது. பலதோழர்கள் சொற்பொழி வாற்றினர். அன்றிரவு "ஞானஉதயம்" என்னும் நாடகத்தைக் கோலார்த் தோழர்கள், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடித்தனர்.

### சென்னை

16-12-45ல் சென்னைபக்தர்ராமநாய்க்கன் தோட்டத்தில் ஆர். சீனுவாசன் நினைவுக் கழகத்தின் இரவு பாடசாலையில் எஸ்.குப்புசாமிஅவர்கள் தலைமையில் ஷை கழகத்தின் அங்கத்தினர்கள் கூட்டம் [illegible]

## வெண்ணெய்வைத்து

3-ம் பக்கத் தொடர்ச்சி

போகிறது. போகட்டும், நம்பியாண்டார் நம்பியாவது, தொண்டர் பெருமையைக்கண்டு அறிந்து கூறினாரா? அதுவுமில்லை. அவருக்குப் "பொல்லாப் பிள்ளையார்" (அதாவதுதானாகத்தோன்றியவிநாயகர்) கூறினார், என்பதுகதை. திருநாரையூரில் திருக்கோயில் கொண்டுள்ள பொல்லாப் பிள்ளையார்ருக்கான பூஜாகாரியத்தைக் கவனித்துக்கொள்ளும்படி, நம்பியாண்டார் நம்பிக்குக்கூறினார் அவருடைய தந்தை. நம்பி சோறுபடைத்தானாம் பிள்ளையாருக்கு, பிள்ளையார் சாப்பிடவில்லை, எப்போதும் போல. நம்பியோவிடவில்லை. என் தகப்பனார் தரும்போது சாப்பிட்டுக்கொண்டிருந்தாயே, இப்போதும் சாப்பிடத்தான் வேண்டும் என்றாராம். இதற்குப் பெயர்பக்தி! அவரும் சாப்பிட்டாராம்! இந்த அற்புதத்தைக் கேள்விப்பட்ட அரசன், பரீட்சித்தானாம்; பக்தரின் பெருமையை அறிந்தானாம்;மேலும் பரீட்சிக்கவேண்டி, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோர் ஆக்கிய தேவாரத்தை எங்கு இருக்கிறது என்று பிள்ளையாரைக்கேள் என்றாராம். நம்பிகேட்கப் பிள்ளையார்தேவாரம்இருக்குமிடத்தையும் கூறித், தொண்டர் பேறும் சாற்றினாராம், அதைக்கொண்டுதான் நம்பி, நாட்டுக்கு உரைத்தார், என்பது கதை. அதற்கு ஆதாரமான செய்யுள் இது,

"வார்தருகண்ணீர் சொரிய
நம்பிகேட்ப
வண்தமிழ்கள் இருந்தஇடம்
மன்றுளாடும்
கூர்ந்த இருட்கண்டர் புறக்
கடையின் பாங்கர்
கோல மார்க்கைகள்
அடையாளமாக
சார்ந்தன என்று
அருள்செய்து
தொண்டர் பேறும்
சாற்றுதலால்…………"

ஆகவே, ஆரம்பக் கட்டமுதல் "புலமை"க்கு வேலைஇல்லை,'அருள்' வேலை செய்கிறது. எனவே, சேக்கிழாரின் காவிய ரசனையைப்பாராட்டவும் வழி இல்லாமற் போகிறது. எந்த நம்பிமூலம் தொண்டர் பெருமையைத் தெரிந்து கொண்டாரோ, எந்தநம்பிக்குப் பிள்ளையார்பிரத்யட்சமாகும்அளவுஅருள் கிடைத்து அற்புதம் நடத்திக்காட்டினாரோ, அந்தநம்பியாண்டார் நம்பியைத், தொண்டர்புராணத்திலே, சேக்கிழார் சேர்க்கவில்லை; காரணமும் கூறவில்லை; நானும் அதைக் கேட்கப் போவதில்லை! பாடலுக்கு இலக்கான "தொண்டர்களை"ப்பற்றியே சில கேட்கவிரும்புகிறேன். 8-வது நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும்இடையில்தொண்டர் புராணத்துள் கூறப்படும், "நாயன்மார்கள்" இருந்திருக்கக் கூடும் என்கிறார்கள்; சேக்கிழார் 12-அல்லது 13-ம் நூற்றாண்டுக்காலத்தவர் என்கின்றனர். இந்தத் "தொண்டர்கள்" காவியக்கவசம் பெறவேண்டிய காரணம் என்ன? அநபாயசோழன், சமணரை ஆதரித்து,சீவகசிந்தாமணியைப்புகழ்ந்து வந்ததாகவும், அதுகண்டு சேக்கிழார்சைவமெய்யன்பர்களின்பெருமையை மன்னனுக்குக்கூறி, மன்னனைச் சைவச் சீலனாக்கியதாகவும் கூறுவர். அது எப்படியோ இருக்கட்டும், சேக்கிழார், படம்பிடிக்கும் "தொண்டர்கள்" எதனால் பெருமை அடைகிறார்கள்? அவர்கள், ஏதாவது அதுவரை மக்கள் அடைந்திராத நலன்களைப் பொழிந்தனரா? இல்லை! மக்களை, மிருகத்தனத்திலிருந்து மெய்யுணர்வுக்குத் திருப்பினரா? இல்லை! அதுவரை யாரும் அறியாத மதத்தை ஸ்தாபித்தனரா? இல்லை. ஏசு, முகமதுநபி, கௌதம புத்தர்,மகாவீரர்போலக் கோடிக்கணக்கான மக்களுக்குப் புதுமார்க்கம் வகுத்தனரா? இல்லை! மார்க்கங்கள் புதிதாக ஏற்படுத்தாவிட்டாலும் போகிறது, பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், போன்ற புதிய முறைகளைப் புகுத்தினரா? இல்லை! தொண்டர்களிலே சிலர், சமணமார்க்கத்துக்கு இருந்த செல்வாக்கை அழித்தனர்! கழுவும் ஏற்றினர்! இஃதன்றி, அவர்கள், ஆற்றிய அரும்பெரும் காரியம் என்ன? அருமையான பாசுரங்கள் பாடினர், என்று கூறலாம். உண்மை. ஆனால் பாடல் பாடுவோர், முன்பும் அவர்களுக்குப்பின்னரும் இருந்தனர், இவர்களுக்கென்று தனியான முக்யத்துவம் கற்பிக்கக் காரணம் என்ன? ஏற்கனவே இருந்துவந்த சைவமதத்தைக் கடைப்பிடித்தார்கள், சிவனைத்தொழுதார்கள், சிவதோத்திரப் பாடல்களைக் கோர்த்தார்கள். சைவத்தின்மெருகுகுலையும்போதுகொஞ்சம்'சகாசு' வேலைசெய்தனர். இஃதன்றி வேறு என்ன தனிப்பட்ட காரியம்நடந்தது? அவருக்கு முன்யாரும் கூறாததை ஏசுசொன்னதுபோல்,உருவ வணக்கம்நிறைந்தஉலகிலே, உருவ வணக்கம் தவறு என்றுகூறியமுகமதுபோல், அரசுகள் பலவும் ஆரியத்திடம் அடிமைப் பட்டிருந்த காலை, ஆரியமார்க்கமாகியயாகாதிகளைக்கண்டித்த கௌதமர்போல், "தொண்டர்கள்" என்ன புதுமையைக்காட்டினார்கள்! பொன்னார் மேனியனைப்பாடி,நீறுபூசி,நிகண்டு படித்தனர், மார்க்கம் ஏதும் புதிதாகக்காணவில்லை. மோட்டார் கண்டுபிடிக்கப்பட்டு,ஓடும்போது, ஆகாயவிமானம்கண்டுபிடித்தவன் புகழப்படுகிறான்மோட்டார்கண்டுபிடித்தவனைவிட அதிகமாக. அந்த நிலையிலே மோட்டாருக்கு, "புது மெருகு" பூசியவனுக்குப் பொற்பதக்கம் தருவதா, செயற்கரிய செய்தான்என்று. அதுபோல், உலகிலே புதுமார்க்கங்களைக் கண்டவர்கள் வேறு வேறு. தொண்டர்கள் ஏற்கனவே இருந்த சைவத்திலே பூச்சுவேலைக்காரர்கள். அவ்வளவுதானே? இல்லை, இல்லை, அவர்களெல்லாம் ஐயனின் அருள்பெற்றவர்கள் என்று கூறுவார் நண்பர், நம்பவேண்டுமா, சரி, நம்புகிறோம், ஆனால், ஒன்று கேட்கிறோம், ஆண்டவனின் அருளைப்பெற்றவர்கள், இவர்களுக்கு முன்பும் இவர்கள் காலத்துக்குப்பிறகும் இல்லையோ? உண்டு! இன்றும் உண்டு, இனியும் இருக்கும், என் நண்பர் கே. எம். பி. யே, தனக்குஆண்டவன்அருள் பாலித்துவிட்டதாகக் கூறுகிறார். ஆனால் எந்த ரூபத்திலேஎன்றுகூறவில்லை! ஆகவே அவர்கள் அருள் பெற்றவர்கள், எனவேபிரத்யேகப் பெருமைக்கு உரியவர்கள் என்று கூறுவதும், முன்னாள் புராணங்களைப் பழிப்பதாகும். வேறு என்ன தான் காரணம்? தொண்டர்கள் கதையிலே காணப்படும் அற்புதங்களைக்காட்டப்பிரியப்படுவார் நண்பர். இந்த அற்புதங்களின் 'இலட்சணம்' ஒருபக்கம் இருக்கட்டும், இவை உண்மைஎன்றே வைத்துக் கொள்வோம், பெருமைக் குரியன என்றே வைத்துக் கொள்வோம், இருப்பினும் என்ன, இதைவிடப் பிரமாதமான அற்புதங்கள், இந்தத் தொண்டர்கள் காலத்துக்கு முன்பே நடைபெற்றுள்ளனவே! ஆகவே, இந்தத்தொண்டர்களின் அற்புதங்கள், இதுவரைஉலகில் ஏற்படாததுஎன்றும்கொண்டு பெருமைப்படுவதற்கில்லையே. இருடபாவாகனாரூடராய் இந்தத்தொண்டர்களுக்குக் காட்சிதந்த முக்கண்ணன், இதற்கு முன்பு, எவ்வளவோ முறை பக்தர்களுக்காக அற்புதங்களை நடத்திக் காட்டிக், காட்சி தந்து, மோட்சம் அளித்தார் என்று வேறு பலப்பல புராணங்கள் உள்ளன. எனவே, எந்த ஒருதனிப்பட்ட குணவிசேஷத்தையும், இந்தத் தொண்டர்களுக்கென்று குறித்துக்காட்ட முடியாது. எத்தனையோ ஆயிரமாயிரம் பக்தர்களிலே இவர்கள் சிலர். இவர்கள் மற்றவர்களைவிட எந்த வகையிலே சிலாக்கியமானவர்கள் என்பதற்கு ஆதாரமே காணோம்.

★

ஆண்டவன்இத்தொண்டர்களைச் சோதிக்கிறார், பலகஷ்டங்களை வாழ்க்கையிலே ஏற்படுத்தி,நெருக்கடிகளைஉண்டாக்கி, அந்தச் சமயங்களிலே இந்த அடியார்கள், அரன் மீதுபக்திகொண்டு, ஆபத்துகளைப் பொருட்படுத்தாது இருந்திடவே, சிவனார் இவர்தம் சிவபக்தியைக் கண்டு மெச்சி, காட்சி தந்து முக்தி அருளுகிறார். இதுவே எல்லாத்தொண்டர் கதையிலும் காணப்படும் சாரம். சோதனையும்,அதனைத்தாங்கிக் கொள்ளுவதும், இத்தொண்டர்களுக்குமட்டும் நேரிட்டதுஎன்று இருந்தாலாவது, இவர்கள்பெருமைக்கு உரியவர் என்று கொள்ளலாம். ஆனால்இதுபோன்ற சோதனைகள்,வேறுபலபக்தர்களுக்கும்ஏற்பட்டிருக்கின்றன.இன்றும் சாமான்யர்களுங்கூடத், தங்களுக்குவாழ்க்கையிலே நேரிடும், நெருக்கடிகளை எல்லாம், 'பகவான் சோதிக்கிறார்' என்றுதான் கூறுகின்றனர், தொண்டர்கள் எப்படிச்சோதனை காலத்திலே, பக்தியைக் கைவிடாது இருந்தனரோ அதுபோன்றே இன்றும், எவ்வளவோ மக்கள் உள்ளனர்.

காசநோய்தீரவில்லை. கையிருப்புக் கரைந்துவிட்டது; கடன் கொடுப்பார்இல்லை, அந்நிலையிலே, நோயாளி, 'பகவான் சோதிக்கிறார்' என்றுதான் கூறுகிறான்.

குடிவெறியால், கொண்ட கணவன்தன்னை நையப்புடைக்கும்போது புலம்பும் பத்தினி, அடுத்தவீட்டு மங்கையிடம், 'இதெல்லாம் பகவான் சோதனை' என்றுதான் கூறுகிறாள். வியாபாரத்திலே குவிந்தஇலாபமும்போய் கைமுதலும்போய்ப்பராரிநிலைவந்தபோது, செல்வவானாக இருந்தவன் 'பகவான் சோதனை'என்றுதான் கூறுகிறான். அதிகாரிகளிடம் சிக்கும்போது, மைந்தனுடன் சண்டையிடும்போது,வாழ்க்கையிலே கஷ்டம் வருகிறபோதெல்லாம், 'பகவான் சோதிக்கிறார்' என்றுதான் ஒவ்வொருவரும் கூறுகின்றனர். எனவே, சோதனைக்கு ஆளானவர்கள், இந்தத் தொண்டர்கள்மட்டுந்தான்,என்று கூறியும் அவர்களைப் பெருமைப்படுத்துவதற்கில்லை. வேறு என்ன கூறுவரோ? 'சோதனை'என்றதத்துவத்தின் பொருளும் அதனால் இந்நாட்டவருக்கு ஏற்பட்ட மனமருளும் ஓர்புறம் இருக்கட்டும்: அறிவு வளர்ச்சிஏற்பட்டுள்ளஇன்று,இந்த பக்திமான்களின் கதைகளைத்தெரிந்துகொண்டு, மக்கள் அடையப் போகும்,பிரத்யேகப்பலன்என்ன? அவர்களே சோதனைக்கு ஆளாகிறார்கள்; ஆகவேபுதியபாடம்என்ன பெறப்போகிறார்கள், முன்னாளில் சோதனைக்கு ஆளானவர் கதை கேட்பதால்? சோதனைகளிலே வெற்றி பெற்ற தொண்டர்களுக்கு, மோட்சம் கிட்டியதாகக்கதைமுடிகிறதே தவிர, அத்தகைய தொண்டரின் அருளால் நாட்டின் குறைகள் நீங்கின என்றுகதைஇல்லையே. ஆகவே, வெற்றி பெற்ற தொண்டரானாலும், வேறொருவருக்கும் அதனால் பலன் இல்லையே! இந்நிலையிலே இதற்குமுன் எவ்வளவோ அற்புதங்களை நடாத்தியவர்கள் இருந்ததாகப்புராணம் இருந்தும், இந்தத் தொண்டர்களைப்பற்றிச் சேக்கிழார், தனிப்புராணம் ஒன்று பாடவேண்டிய அவசியம் என்ன?பாடியதால்வந்துற்றபலன் என்ன? அவர் பாடியதை எடுத்துக்கூறும் புலவர்கள்மொழி, மக்களுக்கு என்னவழியைக் காட்டும்? இயற்பகையும் சிறுத்தொண்டனும் சென்ற வழி செல்க என்று அவர்களேகூடச் சொல்லத்துணியார். மற்றையோரில்யாருடைய வழிதான், காட்டுவர், எந்தவழி நடக்க, மக்கள் இசைவர்? பக்தியாலோ, அருளாலோ, பூர்வஜென்மப் பலனாலோ, விசேஷம் எதுவும் பெறாமல், இரயிலையும், தந்திக்கம்பியையும், மின்சாரத்தையும், வானொலியையும், விஷக்கிருமிகள் போக்கும் விதத்தையும், வேறுபல விஞ்ஞான முடிவுகளையும்கண்ட அறிஞர் பெருமக்களால், இன்று அவர்களின் பெயரையும் கேட்டறியாத மக்களும் வாழ்க்கைச்சுகம் பெறுகின்றனர். ஏனாதியும் ஏறிபத்தரும் தத்தம் பிறவிப்பிணியைத் தீர்த்துக்கொண்டதாகக் கூறலாமேயன்றி, மக்கள் அவர்களால் அடைந்தபலன் ஏதாவதுஉண்டோ?

★

உலகமாவீரர்கள், மண்டலங்களைச்சமைத்தனர் வீரத்தால்—விஞ்ஞானிகள், இயற்கையின் சேஷ்டைகளைக்கட்டுப்படுத்தி எல்லாரும் இன்புற்று வாழவழி சமைத்தனர். அறிஞர்கள், ஆட்சிமுறை, மக்கள் வாழ்க்கைமுறை, பொருள்முறை என்பனவற்றிலே, புதுமுறைகள் கண்டு, மக்களுக்கு மாபெருந்தொண்டு ஆற்றினர். அவர்களைமக்கள் அறியார். அறிவைஆபாசப்புராணங்களுக்குப்பயன்படுத்தும் அன்பர்கள், ஏன், அந்த அறிஞர்களின் வாழ்க்கையையும், அவர்களால் மக்கள்சமுதாயம் அடைந்த நலனையும் எடுத்துக்கூறி,இன்பமுறச்செய்யக் கூடாது! அமெரிக்கக்கண்டத்தைக் கண்டுபிடித்தகொலம்பஸ்,இந்தியாவுக்குக் கடல்மார்க்கம்கண்டவாஸ்கோடிகாமா, ஆப்ரிக்காவில் மண்டலங்கள் பலகண்ட லிவிங்ஸ்டன், அடிமைவர்த்தகத்தை ஒழித்தஆபிரகாம்லிங்கன், போன்ற'தொண்டர்களின்' பெருமையைப்பேசுவதால் படிப்பதால், மேனாட்டவர், பலன் பெற்றுவாழ்கின்றனர். இங்குநமது புலவர்கள், கோட்புலியையும் கோவணத்தை எடைபோட்ட பக்தன் கதையையும்அன்றோநமக்குப்படித்துக் காட்டுகிறார்கள். பயனற்ற வேலை, இதற்குப்புலமை பயன்படுகிறதே, என்பதுதான்எனக்குள்ள வருத்தம். மேனாட்டவரின் பெருமையைப்பேசுவது இழுக்குஎன்பரேல், இந்நாட்டுப்பெருமக்கள், நம் நாட்டு வீரர்கள் கதைகள் உள்ளனவே, எடுத்துக்கூறுவதுதானே. கரிகாலன், குலோத்துங்கன், இராஜராஜன், சேரன்செங்குட்டுவன் போன்றவேந்தர்தலைவர்களைப்பற்றி யாவதுபேசினால், வீரமாவதுபிறக்க வழிஏற்படலாம்; அதைவிட்டு, சந்தனம்காண முழங்கையைத்தேய்த்தவன் கதையும்,ஓடுமறையஓலமிட்டவன்கதையும்,பண்டாரங்கட்குச் சோறிட்டுப்பராரியானவன்கதையும்,பெண்ணின்கூந்தலைப்பெருமானுக்குத்தந்தவன்கதையும்,மூக்கறுத்தவன் நாக்கறுத்தவன் கதையும்பேசிக்காணப்போகும் பயன் என்ன? இதற்கு ஆராய்ச்சி செய்தேன்,கல்-

(5-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாட்டேன் உனக்குத் தருவதாகக் கூறிவிட்டபிறகு," "பேச்சு என்ருல்பேச்சுத்தானே,"என்றமொழிகளைச்சேர்த்து, தனபாலர் நாய்க்குட்டியைத்தந்தார், சுகானந்தத்திடம்.சிங்காரம், அன்னத்துக்குத்தர எண்ணியிருந்த முத்தங்களிலே அரைப்பாகத்துக்குமேலாகவே,தந்துவிட்டான், ஜார்ஜுக்கு—அதாவது நாய்க்குட்டிக்கு!

*          *          *

நாய்க்குட்டியைப் பராமரிக்க வேண்டிய முறைகளை விளக்கமாகக்கூறினுள் தேவா. பால் இந்த அளவு, பிஸ்கட் இத்தனை துண்டு தரவேண்டும் என்று கூறினுள். இராத்திரி வேளையிலே, "மெத்து மெத்து என்று" துணி போட்டுப் படுக்க வைக்கவேண்டும் தெரிகிறதா என்று கூறினுள். தனபாலர் கூறினதிலே தவறுஎன்ன!பைத்யக்காரப்பெண்தானே தேவா! சிங்காரத்தின் நிலைஎன்ன, நாய் வளர்ப்புக்காகத்தேவா போதிக்கும் முறை அவனுல் நடத்தக்கூடியதா? எண்ணிப் பார்த்தாளா? அவள்தான் அவனை, "அவர்" என்று மனதிலே கொண்டிருந்தாளே! ஆகவே அவரால், பாலும் பிஸ்கட்டும், பட்டு மெத்தையும் சம்பாதிக்க முடியும் என்று எண்ணிவிட்டாள்!! பித்தத்தில் ஒருவகைதானேகாதல்! அந்தப் பித்தமும், ஒரேவிநாடியிலே, ஒரே வாக்கியத்திலே போய் விட்டது தேவாவுக்கு.சிங்காரத்துக்குதேவாவின்மனநிலை தெரியாது.நாய்க்குட்டியை எப்படி வளர்ப்பது என்று தேவா கூறிமுடித்ததும், சிங்காரம் "அதை எல்லாம் அன்னம் கவனித்துக்கொள்ளும்" என்று கூறினுன் புன்னகையுடன். அன்னம் என்ற உச்சரிப்பே புன்னகைக்குக் காரணம்என்பது தேவாவுக்கு விளங்கிற்று. 'அன்னம் யார்?' என்றுதேவா,கேட்டாள். "ஏன் உனக்குத் தெரியாதா? அவளைத்தான்,தைபிறந்ததும் அவன் கலியாணம் செய்து கொள்ளப்போகிருன்" என்று தேவாவின் தாயார் கூறினுள். அவன் புன்னகைபூத்த முகத்தோடு நின்ருன்! பித்தம் தெளியும் நிலைபிறந்தது தேவாவுக்கு.

"ஜார்ஜ்," சிங்காரத்தின் சினிமா, காபி, சீட்டாட்டம், முதலியபல வழக்கங்களைப் போக்கிவிட்டான். கையில் கிடைக்கும் 'காசு,' பிஸ்கட்டாகப், பாலாகச், சோப்பாக, மாறும்போது,சீட்டாட்டமும்சினிமாவும்ஏது! அன்னத்துக்கு அன்புடன் என்றேனும் ஓர் நாள் வாங்கித்தரும் கனகாம்பரம்கூட, பிஸ்கட்டாகிவிட்டது! 'ஜார்ஜ்' நன்ருக வளரவேண்டும் என்பதிலேஅவன் அவ்வளவு அக்கரை காட்டினுன், செல்வைப் பொருட் படுத்தாமல். ஆனுல் "ஜார்ஜ்" இந்த ஏழைவீட்டுக்குஏற்றதா,திருப்தியோடுவளர. மெலிந்தான், உடலிலே சொறிகண்டது, ஓயாது அழுவான். "ஜார்ஜ்" வரவர அவலட்சணமாகவும் ஆகிவந்தான். சிங்காரம், இந்த நாய்க்குட்டிக்காகப்பணத்தைப் பாழாக்குவது, அன்னத்துக்குப் பிடிக்கவில்லை. "அதன்வயிறு என்னவயருே, ஒருநாளைக்கு நாலணு பிஸ்கட்டைத்தின்று விடுகிறதே. இவ்வளவு தின்றும், எலும்பும் தோலுந்தான் மிச்சமாக இருக்கிறது" என்றுஏசுவாள் அன்னம்.இந்தவீண்செலவை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தாள்.

"சோறு போடலாமே ஜார்ஜுக்கு" என்றுயோசனைகூறினுள், செலவைக் குறைக்க. "செச்சே! ஒரு ஆறுமாதகாலம், பாலும் பிஸ்கட்டுந்தான் தர்வேண்டும், தேவா அதை வற்புறுத்திவற்புறுத்திக் கூறினுளே தெரியுமா?" என்ருன் சிங்காரம். "பொழுதுசாயும் போது அந்த நாய்க்குட்டியைக் குளிப்பாட்டு வானேன்?" என்று கேட்பாள் அன்னம். "இது தேவாவின் யோசனை" என்பான் சிங்காரம். கைதவறி நாய்க்குட்டியைக் கிழே போட்டு விட்டாலோ, அன்னத்தைக்கண்டிப்பான்; அந்தக்கண்டனம் கூட அவளுக்கு அவ்வளவு கஷ்டமாகஇல்லை, இடை யிடையே தேவா, தேவா, என்று அவன்பேசியதுதான் கஷ்டத்தைத் தந்தது. தேவாமீது அன்னத்துக்கு அருவையே பிறந்தது. தேவாவையே கொண்டுவந்து வளர்ப்பது தானே என்று கேலியாகக் கூறிவிட்டாள் ஒருநாள். அந்தச்சமயம் சிங்காரம் பார்த்தபார்வை அன்னத்தின் கண்களிலே நீரைப் பெருக்கிவிட்டது. தேவாமீது பிறந்தகோபம், அன்னத்தின் வீட்டைவிட்டுக் கிளம்பி, தனபாலச் செட்டியாரின் அழகான மாளிகைக்குள் நுழையுமா? "ஜார்ஜ்" மீதுதான் பாய்ந்தது, அதுவும், சிங்காரம் வீட்டில் இல்லாத சமயங்களில்.

*          *          *

அன்று மழை! தெருவெல்லாம் சேருகிவிட்டது. சிங்காரம் வசித்து வந்தவீதியிலே 'தார்ரோடு' இருக்குமா, அவன்என்ன தனபாலனு! அந்தச் சேற்றிலேஉருண்டுபுரண்டு "ஜார்ஜ்" தன்னுடைய வெள்ளை நிறத்தைக் கெடுத்துக் கொண்டு, வீதிசுற்றி வீட்டு இலைக்குக்குலைத்துக் கிடக்கும் "மட்டரக" நாயாக நின்ருன். அன்னம், தேவாவை எண்ணி, ஒருவகையான திருப்தி பெற்ருள். அந்தத்தேவாவும்,வாழ்க்கையிலே சேறும் அழுக்கும் நிறைந்த இடத்திலேபோய்ச்சேர்ந்தால், இந்த ஜார்ஜு போலத்தான் உருமாறிப்போவாள்,இப்போதுஉள்ள மினுக்கும் தளுக்கும்இராது,என்று எண்ணினுள், கொஞ்சம் சந்தோஷமும் அடைந்தாள். அர்த்தமற்ற ஆனந்தந்தான், ஆனுல் அன்னம் அதற்குமேல் என்ன எதிர்பார்க்க முடியும்! ஏழையின் கண்ணீருக்குத்தான் ஆழ்ந்த பொருள்இருக்க முடியும், களிப்பு பெரும்பாலும் காரணமற்றதாகத்தானே இருக்கும். ஜார்ஜின் நிலையைக்கண்டான் சிங்காரம், அதை இந்தக் கதிக்கு ஆளாக விட்டுவிட்டு, இளித்துக் கொண்டிருக்கும், அன்னத்தையும் கண்டான், கடுங்கோபம்' கொண்டான்; சீறினுன்; கண்டபடி ஏசினுன். அன்னத்தை அடிக்கவும் கை ஓங்கினுன்;தெருக்கோடியிலே,ஒரு கூட்டம்வரக்கண்டு, அடங்கினுன்.

*          *          *

தனபாலச் செட்டியாரின் தூரபந்து, குழந்தைவேலு முதலியார். செட்டியாருக்கு முதலியார் பந்துவா? என்று சந்தேகம் பிறக்கும், விஷயம் இது. 'செட்டியார்'என்று சிலபகுதிகளில் வாழும் முதலியார்களுக்குப் பட்டம் உண்டு, தனபாலர் அந்தவகை. குழந்தை வேலரின் ஒரேகுமாரர் அருமைநாதன்; சமூக சேவா சங்கத்தலைவர். அந்தச் சங்கத்தை ஆரம்பித்தவர்,நடத்துபவர், தலைவர், யாவும் அருமை நாதனே தான்! சர்க்கார் மானியமும், கன தனவான்களின் நன்கொடையும், அந்தச் சங்கத்துக்கு ஏராளம். அருமைநாதன், ஏழை எளியவரின் நல்வாழ்க்கைக்காகத், தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கத் துணிந்து விட்டவர், என்று அவரைப் புகழாத பத்திரிகையே கிடையாது. சமூக சேவா சங்கத்தலைவரின் அபாரமான பணியினுல், ஏழையின் எந்தப்பிணியாவது போயிற்ரு என்று மட்டும் யாரும் கணக்குப் பார்த்ததில்லை; பார்க்கவுங்கூடாதல்லவா? அருமை நாதர் என்ன அன்னக் காவடியா, சீமான் மகன். அவர், 'அடிக்கடி' ஏழைகளின் விடுதிகளைப்பார்வையிடுவார்; பிய்ந்துபோன கூரைகள், உடைந்த மண்பாண்டங்கள், சரியும் சுவர்கள், குப்பை கூளக் குவியல்கள், ஈமொய்க்கும் இடங்கள், புழுநெளியும் சாக்கடைக்கால்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவார், பிறகு,இந்த அசுத்தங்களினுலேதான், பிளேக், இன்புளுயென்சா, காலராமுதலான நோய்கள் பிறக்கின்றன, அவை ஏழைகளைச் சாகடித்துவிட்டுப்பிறகு, நகரெங்கும் பரவி, மக்களை அழிக்கின்றன, என்பதுபற்றிய விளக்கத்தை உரைப்பார். இந்த அசுத்தம் நிரம்பிய இடத்திலேயே இருந்து தீர வேண்டிய நிலை ஏன் ஏழைக்குவந்தது என்பதுபற்றி அவர்பேசினதில்லை, பேசும்படிகேட்டவர்களுமில்லை. அருமைநாதரின் கண்கள் இந்தஏழைவிடுதியிலே உள்ள அசுத்தத்தைக்காண்பதோடு ஓய்வுஎடுத்துக்கொள்ளவில்லை. அழுக்குஆடையைஅணிந்துகொண்டிருந்த அழகிய அபலைகளையும், கூர்ந்து கவனித்து வந்தார்; கண்ணடியிலேவிழும் கனியைச் சுவைப்பார், மற்றதுகளைப் பற்றி, சிச்சீ! இந்தப்பழம்புளிக்கும் என்பார்.அவர், "சமூகசேவாசங்க வேலைசெய்ய" தேவா சகிதம், வந்தார் அன்று; அழகான மங்கையும் ஆடம்பர ஆடவனும், ஏழைகளின் விடுதிப்பக்கம் வந்தால், கும்பல் சேரத் தானேசெய்யும். "ஜார்ஜை" யும் மறந்து, சிங்காரம், அந்தக்கும்பலைக் கவனிக்கத் தொடங்கினுன். தேவாவின் கண்கள், சிங்காரத்தின் மீது கோபத்தைக் கக்கிற்று. "இது தானு நீ நாய்வளர்க்கும் இலட்சணம்" என்றுகேட்டாள். அருமைநாதன் விஷயவிளக்கம் கேட்டான். கோபத்தோடு பதிலளித்தாள், தேவா. "அப்பா" கொடுக்க இஷ்டப்படவேஇல்லை. அம்மாவும், இந்த அன்னுடிகளுக்குக் கொடுக்கக் கூடாதுஎன்றுசொன்னுர்கள்.நான் தான், பிடிவாதமாகப்பேசி, நாய்க்குட்டியை வாங்கிக்கொடுத்தேன். அதைஇந்த இலட்சண மாக்கிவிட்டார்கள்" என்ருள். தேவாகோபத்தைக் கக்கிக்கொண்டிருந்தபோது, சிங்காரம் பயத்தோடு, நாய்க்குட்டியைத் துடைத்து விட்டுக்கொண்டிருந்தான். "அன்னுடிகள்" என்ற சொல், சிங்காரத்தின் இருதயத்திலே வேல்பாய்வதுபோல் பாய்ந்தது. இருதயத்திலே, ஆயிரம் வேல் பாய்வது போலாகி விட்டது, அருமைநாதனின் பேச்சு! அவன் சொன்னுன், "என்னதேவா! இந்த ஏழைகளிடம் தரமா, இந்த

தந்தி:- "புருமார்க்" திருச்சி.




அருமையான நாய்க் குட்டியை, இதுகளுக்கே, சுத்தமாக வாழத் தெரியாமல், குப்பையில் புரண்டு கொண்டிருக்கின்றன. இதுகளைச் சீர்திருத்திக்,கழுவிக்குளிப்பாட்டும் வேலையிலே நாம் ஈடுபட்டிருக்கிருேம். நீ, இவன் நாய்க்குட்டியைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவில்லை என்றுகுறைப்படுவதுதவறு.'ஜார்ஜ்' ஜின் உடல் அழுக்குக்கிடக்கட்டும், இவன்தலையைப்பார்,வறண்டுகிடக்கிறது, சட்டையிலேபார் எவ்வளவு அழுக்கு, காலிலேபார் சேறு, கண்ணிலேபார் மசி, இவன் இருக்கும் இலட்சணத்தைக் கவனிக்காமல், நாய்க்குட்டியைக் கவனிக்கிருயே, நீஒரு"பைத்யம்"என்ருன்.'ஆமாம்' என்ருள் தேவா; ஆனுல் அருமைநாதன் கூறியதை எண்ணியல்ல. இப்படிப்பட்டவனைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று கூடஒருசமயத்திலே நினைத்தோமே என்ற எண்ணத்தாலேதான். சிங்காரத்தால் அழத்தான் முடிந்தது, அன்னம்முணுமுணுத்தாள்,கையை நொடித்தாள், வேறுஎன்ன செய்வாள்? சேவாசங்கத்தலைவர் சேல்விழியாளுடன் போய் விட்டார், போகுமுன்பு, அன்னத்தின்அழகை ஒருமுறை பார்த்து விட்டார்!

சிங்காரம், தன்உலகைஉணர்ந்து கொண்டான். செல்வவான்களின் வாழ்க்கை அம்சங்களிலே சிலவற்றையாவது தானும் அனுபவிக்க வேண்டும் என்ற 'வீணுனமோகம்' ஏற்பட்டதற்காகவருந்தினுன். "கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழி" யானதால், வீணுன சஞ்சலமே ஏற்பட்டதை உணர்ந்தான்.

*          *          *

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஓர்நாள், அருமைநாதன், மோட்டாரைஓட்டிக்கொண்டு,அந்தவீதிப் பக்கம் வந்தான்; சமூகசேவைக்காகஅல்ல; அன்னத்தைத் தரிசிக்கலாம் என்று. "ஜார்ஜ்" கவனிப்பாரற்றுக்கிடந்த சமயம் அது. புழுதியிலே படுத்துக்கிடந்தது, மோட்டாரின் சக்கரத்தில்சிக்கிற்று, நொறுங்கிச்செத்தது; அன்னத்தைப்பிறகு பார்த்துக் கொள்வோம் என்று, அருமைநாதன், மோட்டாரை ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

"அடபாவி" என்று அலறினுள் தேவா. ஜார்ஜைவாரிஎடுத்துஅணைத்துக்கொண்டாள். கூக்குரல்கேட்டு உள்ளேஇருந்து ஓடிவந்தான் சிங்காரம். மோட்டாரைக் காட்டினுள் அன்னம். பேசாமல்,ஜார்ஜை, அன்னத்திடம் இருந்து வாங்கிக்கொண்டான் சிங்காரம்.இரண்டுசொட்டுக் கண்ணீர்விட்டான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ராஜம் விலாஸ்
கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!
80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

# வெண்ணெய்வைத்துக் கொக்கு பிடிக்கும் வேடிக்கை

## பேச்சுக்கடைக்காரரின் பூச்சுவேலை

# புராணப்புரட்டுக்கு புது வக்கீல்கள்

—[பரதன்]—

சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சத்தமிட்டுச் சொன்னாராம், புதுப்பக்தரொருவர், "பெரியபுராணத்திலே சீர்திருத்தக்கருத்துகள் உள்ளன — நான் சத்தியம் செய்கிறேன்" என்று. அத்தோடு விட்டாரே ஐயன், அரைப்பலம்கற்பூரத்தையும் எடுத்துக் காட்டாமல், அதுவரை எனக்கு மகிழ்ச்சி. சத்தியம் செய்கிறேன் என்றுஅந்தநண்பர் கூறியது, பெரியபுராணம் சீர்திருத்தக் கருத்துக்கான ஏடு என்பதை உறுதிசெய்யும் சொல்அல்ல; அவர் பாபம், அவ்விதம் நம்பியிருக்கக்கூடும். வயது ஏறஏற, எடுப்பார் கைப்பிள்ளையாகவே இருப்பவர்-என்றும்இளையவர்பகுத்தறிவுத் துறையில், எனவேஅவர், உண்மையாகவே, பெரியபுராணத்திலே சீர்திருத்தக் கருத்துகள் ஏராளமாக உள்ளன என்று நம்புபவராகஇருக்கக்கூடும். ஆனால்,"சத்தியம்"செய்வது, வாதத்துக்கு ஆகுமா? இல்லை! அவர் வாய்மொழியை நம்புபவர் இல்லை, என்பதைத் தெரிந்துகொண்டதால் ஏற்பட்ட திகைப்பு, அவரைக் கூவச் செய்தது; "சத்தியம் செய்கிறேன், அப்போதாவது என் சொல்லை நம்புங்கள்" என்று கெஞ்சச்செய்தது. பரிதாபமான நிலைதான்! படிப்பாலும் பண்பாலும், அறிவு ஆராய்ச்சியாலும், மன்றிலிருப்போரின் மனதிற் சரியெனப் படக்கூடியவைகளை எடுத்துக் கூற வேண்டியதுமுறை; இவரோபாபம் "சத்தியம்" செய்கிருர்; அவ்வளவு நம்பிக்கைக் குறைவு மக்களிடை உண்டாகிவிட்டது,அவர்உரையில்- அவர் உரைக்க எடுத்துக்கொண்ட பொருளில்.

★

"நிச்சயமாக எடுக்கலிங்க"

"போடா தடிப்பயலே, நீதவிர வேறுயார் இருந்தார்கள் இங்கே, நீதான் எடுத்துக் கொண்டு இருப்பாய்"

"இல்லிங்க, என்னை நம்புங்க, நான் திருடுவது கிடையாதுங்களே"

"ஆஹா! மஹாயோக்யன்தான்! மூடுடாவாயை. நீதான் செய்திருப்பாய் அந்தத் திருட்டு வேலையை. உள்ளதைக் கூறிவிடு, உதைவிழு முன்."

"சத்தியமாகச் சொல்றேனுங்க நான் எடுக்கவில்லேபணத்தை"

இந்தச் "சத்தியம்," வேலைக்காரனுக்கும் எஜமானுக்கும் இடையே, களவு நடக்கும் சமயத்திலே,கிளம்புவதுண்டு. அதன் எதிரொலி, பெரும்பாலும் அழுகுரலாக இருக்கும்.பணியாளின் பரிதாபட்'பாணி'யில், வாதாடும் வேலையினர்,போராடும் பருவத்தினர், நூல்நாடும்பண்பினர், நாஆடினால் நாடு ஆடும் என்றநினைப்பினர்,நண்பர் கே.எம். பாலசுப்பிரமணியம், பேச நேரிட்டது கேட்டு, அவருடைய முன்னாள்முடுக்குத்தெரிந்தநான் வருத்தமடையாது இருக்கமுடியுமோ!தீப்பொறிபறக்குமேஅவருடையபேச்சிலே முன்பு; திருஏகம்பனின் திருஅருளைத்திருநீற்றுப்பூச்சிலேகாண்பதாகக் கூறிக்கொள்ளும் இந்தச் சமயத்திலே, ஏனோபாபம், கசிந்து கண்ணீர்மல்கி, 'சத்தியம்' செய்கிறேன், என்று கூப்பியகரத்தராய்க் காட்சிதரவேண்டும்! ஏன், சொல்லுக்கு அரணாகச் சத்தியம் செய்து தீரவேண்டியநிலை பிறந்தது? ஏன் அவ்வளவு சோடையானபொருளை விற்கக்கிளம்பினார்? இதை விடச் சும்மா இருந்தே சுகம்பெறலாமே! நண்பருக்கு, என் வேண்டுகோள் இது: "தோழா! தோடுடையசெவியனின் புகழ், அந்தத்துறையிலே அதிக அனுபவம் பெற்ற நாவாணிபர்களால் நாட்டுக்கு எடுத்துக் கூறப்பட்டு, விவேகிகளால்தள்ளப் பட்டுவிட்டது,ஏன் "புதுபோதை"க்காரராகிய (சிவ போதையைக் குறிப்பிடுகிறேன், வேறென்றுகூறேன் பராபரமே!) நீர், அந்தவேலையிலே வீணாக நுழைகிறீர்.குண்டலமணிந்து, குறுநடை நடந்து, சிறுமதி பூண்டவனின்சிந்துபாட,பாடி ஆட, ஏடு ஏந்திகள் ஏராளமாக உள்ளனர், அதேவேலைக்குநீர்செல்வானேன்!ஜினிவா செல்வாய்!அமெரிக்கா போவாய்! தமிழரின் வீரத்தின் தூதனாய், பகுத்தறிவின்பாதுகாவலனாய் என்று எதிர்பார்த்த காலம் ஒன்று இருந்ததே, மறந்தனையோ? இன்று "மந்திரமாவது நீறு"என்றுகூறவும் துணிந்தனையே! இதிலே,முதலிடமும் கிடைக்காதே, முதல் வரிசையிலும் இடமிராதே, கொடி தாங்கி வேலைக்குத்தானே ஆள்தேவை அங்கே. அதிலேயும்ஓர் ஆனந்தம் காண்கிறீரோ? ஏன்? இந்த வீண்வேலை, கே. எம். பி. இருக்கிறரே அவர் எந்த விஷயத்தையும் பேசக்கூடியவர் அழகாக என்று பெயர் எடுத்தது போதும்" என்று கூறுகிறேன், நட்புகாரணமாக. அவரோ, "நான்வாதாடவும் தயார்; இதுபற்றி" என்றுயாரிடமோமுழக்க மிட்டதாகக் கேள்வி. குருநாதர் துணையுடன் அவர் அதற்கு என்றையத்தினம் தயாராளுலும், அவருடன் வாதிட ஆட்கள் உள்ளனர், அவர்கள் என் நண்பரின் இனியநடைஅழகுஇல்லாதவர்களாக இருக்கலாம், ஆனால் நண்பரின் நாறிப்போன சரக்கை, ஊரறியச் செய்யும் அளவுக்கு, அந்த விஷயவிளக்கத்தைத் தெரிந்துவைத்துக்கொண்டுதான் இருக்கிருர்கள். மன்றமேற அவர் இசைவதானால், மகிழ்ச்சியே, இதுவெறும் புகழ்ச்சியில்லை, உண்மை!!

★

நண்பர் கே. எம். பாலசுப்பிரமணியம், புலவர் இராசமாணிக்கனாருடன், கச்சி ஏகம்பன் வாழும் காஞ்சியிலே, சென்றகிழமை வந்திருந்தாராம். இருவரும், மக்களைஒரு மாடியிலே கூட்டிவைத்து, பெரியபுராணபோதனை புரிந்தனராம், விரமும்,இரசமும் சொட்டச் சொட்ட! புலவர் இராசமாணிக்கனார், காவியச்சுவைமட்டுமல்ல, சரிதநுட்பங்கள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டினாராம்.

★

பெரியபுராணத்திலே சீர்திருத்தக்கருத்துக்கள் உள்ளன என்று கூறினரே, அது உண்மை என்றே வைத்துக்கொள்வோம், இருந்தால் என்ன? சீர்திருத்தக்கருத்துகள்எங்கெங்கு தேடினாலும்காணக்கிடைக்காத தங்கம்போலவும், அதைத் தேடித்தேடி உலகு அலுத்துப்போனதுபோலவும், இவர்ஏதோ,'உலக நன்மைக்காக', புராணச் சுரங்கத்துக்குள் நுழைந்து, அங்குசீர்திருத்தச்செம்பொன்னைக் கண்டுபிடித்து காட்டுவதுபோலவும், பேசுகிருரே, இன்று சீர்திருத்தக்கருத்துக்களின் குவியல் கண்எதிரே கிடக்க, புராணக்குப்பையைக்கிளறிக் கிளறிக், கண்டேன் சீர்திருத்தம் என்றுகூவுவது, விவேகத்தின் அறிகுறியா, பண்பின் பட்டயமா, பொதுநல நோக்கப்பதக்கமா, என்ன, அதன் பொருள்? சீர்திருத்த வாதிகள், அவர்கள் செப்பிய மொழிகள்உள்ளன,அந்தஏடுகளைநாட்டவருக்குஎடுத்துக்கூறுவதைவிட்டுப், புராணத்தில் புகுந்து சீர்திருத்தக் கருத்துகளைக்கொய்தேன்,இதோதந்தேன், என்று பேசுகிருர்களே, ஏன் இந்தப்பித்தம்! கல்யாணி இராகமும் காம்போதியும் இப்படி இருக்கும், என்பதை விளக்க இசைவாணனை நாடட்டும், இசைநூலைப் படிக்கட்டும் என்றுகூறுவதுமுறையாகுமே தவிர, இராக இலட்சண ஆராய்ச்சியைக் கண்டறிய நடுநிசியிலே கொசு ஆராய்ச்சியிலே ஈடுபடுவது முறையாகுமா? இந்த நண்பர்கள், தமது அடுத்த அலுவலாக "இசையும் கொசுகும்" என்று ஆரம்பித்தாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லையே. இவ்வளவு விழிப்பு ஏற்பட்ட இந்தநாளிலே, எவ்வளவு துணிவுடன், கூச்சத்தை மறந்து, பேச்சழகராக் இருக்கவேண்டும் என்ற ஆசையால் தூண்டப்பட்டு, 'பெரியபுராணமும் சீர்திருத்தமும்' பெரிய புராணமும் சரித்திரமும் என்று பேசுகிருர்கள்! இனி, 'கொசு இசை''மூட்டையின்போர்த்தந்திரம்' என்றுபுதியபிரச்னைகளைப் பற்றி, ஆழ்ந்தகருத்துகளை ஆராய்ச்சிபூர்வமாகப்பேசத்தலைப்பட்டுவிடக்கூடும். எனக்கே, வெட்கமாகத்தான் இருக்கிறது,என் நண்பர்களின் நா அசைவின்போக்கைக் கேட்க. "அதிலே இது" என்றஎண்ணமும், பேச்சும் பிறப்பானேன்; 'அது இது' என்று கூறமுடியாத நிலைதானே அதற்குக்காரணம்! பெரியபுராணத்திலே,சீர்திருத்தம்தேடுவானேன், தனியாகச்சீர்திருத்தக் கருத்து இல்லையா, ஏடுகளிலே. பெரியபுராணத்திலே சரிதம்தேடிக் கிடப்பானேன், சரிதஏடுகள் இல்

(3-ம் பக்கம் பார்க்க)

## இரு பரம்பரைகள்


7-ம் பக்கத் தொடர்ச்சி

"உடலிலே சேறுபூசிக்கொண்டதற்கு உருகிப்போனன் படுபாவி! இப்போதுசாகடித்துவிட்டுத்,திரும்பிக்கூடப்பார்க்காமல் போகிருன்" என்றுகூறி அழுதாள் அன்னம். புறக்கடையிலே ஒரு பள்ளம் தோண்டிப் புதைத்தான் இறந்து போனஜார்ஜை!ஜார்ஜைமட்டுமல்ல, அன்னத்தின்மீது கொண்டகோபத்தை, ஆடம்பரப்பிரியத்தை,பழையநாளைய எண்ணங்களை.

* * *

நாலைந்து வருஷங்களுக்குப்பிறகு ஓர்நாள், 'வெள்ளை"மீது கருப்பனை உட்காரவைத்து, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் அன்னம். "கருப்பண்ணசாமி" தயவால்பிறந்தான் என்றுஎண்ணி, தன்குழந்தைக்குக் கருப்பண்ணன் என்று பெயர் வைத்தான் சிங்காரம். வெள்ளைஅவன்வீட்டுநாய்; அதுபிஸ்கட்டும் தின்பதில்லை,பாலும்குடித்ததில்லை; எங்கோ, எதையோ, எப்போதோ தின்றுவிடும், சிங்காரத்தின் வீட்டுக்குத்தான்காவல்புரியும், குழந்தைக்குக் குதிரையாக இருக்கும், கோலால் அடிபடும், ஆனால் வீட்டையும் மறக்காது, குடும்பத்தில் யாரைக்கண்டாலும் வால்ஆட்டிக்களிக்கவும் தவருது. என்றைக்கேனும்ஓர்நாள், எச்சில் இலையிலே இரண்டுபிடி சோறுவைத்து, அன்னம் கூப்பிடுவாள், "வெள்ளே! வெள்ளே!!" என்று. வெள்ளைக்கு அதுவே விருந்து. வெள்ளை பிறந்த இடம் தெருக்கோடி பாழ்மண்டபம். தாயும், தந்தையும் தெருப்பொறுக்கிகள், தனபாலச்செட்டியாரின் வளர்ப்புகள் அல்ல. அந்தப் 'பரம்பரையில்' பிறந்த'வெள்ளைக்கு' விருந்துதானே அது. மனிதர்களிலே மட்டுமல்ல, சகல ஜீவராசிகளிலும், இரண்டு வகையான "பரம்பரை" இருப்பதைச் சிங்காரம் தெரிந்துகொண்டான்; தெளிவு பெற்றான்!

★




Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.